பக்கங்கள்:07

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 18 வியாழக்கிழமை 01.06.2023 கதிர்203

## நள்ளிரவு முதல் பெற்றோல்விலை குறைக்கப்பட்டது

எரிபொருள் விலையில் நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில், திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கமைய, ஒக்டேன் 92ரக பெற்றோல் ஒரு லிற்றரின் விலை 15ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதியவிலை 318ரூபாவாகும்.

ஒக்டேன் 95ரக பெற்றோல் ஒரு லிற்றரின் விலை 20ரூபாவால் ☞2

# பாடசாலை இடைவிலகல் வீதம் யாழ். குடாநாட்டில் திடீர் உச்சம்

ந.லோகதயாளன்

யாழ்ப்பாணத்தில் பாடசாலையைவிட்டு மாணவர்கள் இடை விலகல் திடீரென உச்சமடைந்துள்ளது என்று அதிகாரிகள் கூறுகின்றனர். கடந்த ஆண்டு பாடசாலைகளைவிட்டு 355 மாணவர்கள் இடைவிலகியிருந்தனர். இந்த ஆண்டு முதல் 4 மாதங்களில் மட்டும் 200 பேர் விலகியுள்ளனர் என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சு தெரிவிக்கின்றது.

யாழ். மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற இதன்போதே மேற்படிவிடயமும் சுட்டிக் காட்டப்பட்டது.

மாணவர்கள் இடை விலகளிற்கு நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடியே முக்கிய காரணியெனச் சுட்டிக்காட்டப்பட்டது. ஏனெனில் இடைவிலகும. மாணவர்கள் தொழிலிற்குச் செல்கின்றனர் என யாழ்ப்பாணத்தின் 5 கல்வி வலயங்கள் சார்பிலும் சுட்டிக் காட்டப்பட்டது.

இதேநேரம் அதிக மாணவர்கள் இடைவிலகும. கல்வி வலயமாக காணப்படும் வலிகாமம் கல்வி வலயத்தில் கடந்த ஆண்டு முழுமையாக 170 மாணவர்கள் இடை விலகிய நிலையில் இந்த ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் மட்டும் 137 மாணவர்கள் இடை விலகியுள்ளனர்.

இதேநேரம் தென்மராட்சி கல்வி வலயத்தில் கடந்த ஆண்டு 7 மாணவர்கள் மட்டுமே இடை விலகியபோதும் இந்த ஆண்டின் 4 மாதங்களில் 14 மாணவர்கள் இடை விலகியுள்ளனர். யாழ். வலயத்தில் கடந்த ஆண்டு 60 மாணவர்களும் தற்போது 20 மாணவர்களும் இடை விலகியுள்ளனர். வடமராட்சியில் கடந்த ஆண்டு 72 மாணவர்களும் இந்த ஆண்டு இதுவரை 25 மாணவர்களும் இடை விலகியுள்ளனர். தீவகவலயத்தில்கடந்த ☞2

## இனி இது ரகசியம் அல்ல!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் பெற்றிருந்த கட்சிகள் அதிலிருந்து தமிழ் அரசுக் கட்சியை வெளியேற்றிவிட்டு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி என்ற பெயரில் ஒன்றிணைந்தன. ஆங்கிலத்தில் இந்த ஜனநாயகக் கூட்டணியின் பெயர் டிரிஎன்ஏ (DTNA) என்றிருக்கும். அதில் இருக்கும் 'டி'யைச் சுருக்கிச் சிறிதாக்கிவிட்டுத் தாம்தான் ரிஎன்ஏ என்கிற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏன்று உரிமைகோரினார்கள். இதில் ரெலோ, புளொட், ஈபிஆர்எல்எவ், தமிழ் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி 5 கட்சிகள் இடம்பெற்றன. கிட்டத்தட்ட இதன் தலைமை வகிபாகத்தை ரெலோ கொண்டிருந்தது. அதற்காக அதுவொரு வாதத்தையும் முன்வைத்தது, உண்மையான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தொடக்கம் முதலே இருந்த ஒரே கட்சி என்ற வகையில் தானே புதிய டிரிஎன்ஏ கட்சியில் இருப்பதால் தானே மூத்தவர் என்பதுதான் அந்த ☞2

## மாணவிகளுடன் சேட்டைவிட்ட இளைஞர்களில் ஒருவர் கைது

### நியாயம் கேட்ட மாணவனையும் தாக்கினர்

சாதாரண தரப் பரீட்சை எழுதிவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த மாணவிகளுடன் சேட்டைவிட்டும் மாணவிகளைப் பாதுகாக்கும் வகையில் செயற்பட்ட சக மாணவனைத் தாக்கியும் அட்டகாசம் புரிந்த இளைஞர்கள் இருவரில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

யாழ். மாவட்டம், வடமராட்சி, நெல்லியடியில் நேற்று இந்த இரு இளைஞர்களும் மாணவிகளுடன் சேட்டை புரிந்துள்ளனர். ஓ.எல். பரீட்சை எழுதிவிட்டு, வீடு திரும்பிக்கொண்டிருந்த மாணவிகளுடன், பாடசாலைக்கு அருகில் மோட்டார் சைக்கிள் நின்ற இரு இளைஞர்கள் சேட்டைவிட்டதுடன், விரும்பத்தகாத வகையில் நடந்து கொண்டனர் என்று கூறப்படுகின்றது.

அவ்வேளை பரீட்சை எழுதி விட்டு வந்த சக மாணவன் அந்த இளைஞர்களிடம் இருந்து மாணவிகளைப் பாதுகாக்கும் முகமாகச் செய்ற்பட்டபோது, இருவரும் மாணவனை தலைக்கவசத்தால் மூர்க்கமாகத் தாக்கிவிட்டு அவ்விடத்தை இருந்து தப்பி சென்றுள்ளனர்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட மாணவ, மாணவிகளால் நெல்லியடி பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது , விரைந்து விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் மோட்டார் சைக்கிள் உரிமையாளரை கைது செய்ததுடன், அவரது மோட்டார் சைக்கிளையும் பறிமுதல் செய்தனர்.

அவருடன் சென்ற மற்றைய நபர் தொடர்பிலான தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ள நிலையில் அவரை கைது செய்வதற்காக நடவடிக்கைகளை முன்னெடுத்து உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பாடசாலைகள் மற்றும் தனியார் கல்வி நிலையங்களுக்கு அருகில் கூடும் இளைஞர்கள் மாணவிகளுடன் பல்வேறு விதமான சேட்டைகளை புரிவதாகவும், மாணவர்கள் மத்தியில் போதைப் பொருட்களை விற்பனை செய்வதாகவும் பல்வேறு முறைப்பாடுகள் ☞2

# ஒளிபரப்பு அதிகார சபை குறித்த சட்டமூலத்துக்கு கடும் எதிர்ப்பு

## ஊடகங்களை ஒடுக்கும் நடவடிக்கையென எதிர்க் கட்சிகள் ஆட்சியாளர்கள் மீது பாய்ச்சல்

ஒளிபரப்பு அதிகாரசபை சட்டம் மூலத்திற்கு கடும் எதிர்ப்பு வெளியிட் டுள்ள எதிர்க்கட்சிகள் ஊடகங்களை அடக்குவதன் ஊடாக ஏதேச்சதிகார ஆட்சியை நிறுவுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளன.

**சுமந்திரன்**

குறித்த சட்டமூலம் தொடர்பில் இலங்கை தமிழ் அரசுக்கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்ததாவது:

இற்றைக்கு 25ஆண்டுகளுக்கு முன்னதாக 1997ஆம் ஆண்டு அன்றைய ஆட்சியாளர்களால் இதேபெயரில் சட்டமொன்று கொண்டுவரப்பட்டது. அப்போது அந்தச் சட்டமூலத்தினை தற்போதைய ஜனாதிபதியின் நண்பரான காமினி அத்துக்கோரள சவாலுக்கு உட்படுத்தினார். இதனையடுத்து உச்சநீதிமன்றம், வழங்கிய தீர்ப்பில், குறித்த சட்டமூலம் முழுவதுமாக, அரசமைப்பின் 10ஆவது உறுப்புரைக்கு எதிராகவுள்ளது என்றும் சர்வஜன வாக்கெடுப்பின்பிரகாரம்தான்சட்டமாக்கப்படமுடியும் என்றும் குறிப்பிட்டது.

ஆகவே, குறித்த சட்டமூலம் மீண்டும் கொண்டு வரப்படுவதானது ஏதேச்சதிகார ☞2

# நாட்டு மக்களுக்கு இன்று ஜனாதிபதி விசேட உரை



இலங்கையின் பொருளாதாரத்தை மீட்பதற்காக கடந்த 09 மாதங்களில் இந்த ஆட்சி மேற்கொண்ட நடவடிக்கைகள் மற்றும் ஆட்சியாளர்களின் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தின் அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாட்டு மக்களுக்கு இன்று விசேட உரையொன்றை ஆற்ற உள்ளார்.

அனைத்துப் பொதுமக்களையும் தெளிவுபடுத்துவதற்காக இந்த விசேட உரை இரவு 8.00 மணிக்கு நாட்டிலுள்ள அனைத்து தொலைக்காட்சி, வானொலி மற்றும் நவீன ஊடகங்களிலும் ஒளி ஒலிபரப்பு செய்யப்படப் இருக்கிறது. ☞2

## இன, மத முரண்பாடுகளை ஏற்படுத்த பிக்குகளுக்கு வெளிநாட்டுப் பணம்

### வருகின்றது என்கிறார் நீதி அமைச்சர்

எமது நாட்டில் இன, மத முரண்பாடுகளை ஏற்படுத்துவதற்காக சில பௌத்த தேரர்களுக்கு வெளிநாடுகளில் இருந்து பணம் வருகின்றமை கண்டறியப்பட்டுள்ளதாக நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

நீதி அமைச்சில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

மக்கள் மத்தியில் நல்லிணக்கத்தை இல்லாது செய்பவர்களுக்கு பிரதான ஊடகங்கள் சில பெருமளவில் இடம்கொடுக்கின்றன. இன, மத நல்லிணக்கத்தை இல்லாமல் செய்வதற்கு சமூக ஊடகங்களில் பிரபல்யமாக இருப்பவர்களுக்கு உதவி செய்யவேண்டாம். ஏனெனில் இவர்களுக்கு வெளிநாடுகளில் இருந்து உதவிகள் கிடைத்து வருவதாக எமக்குத் தகவல் கிடைத்திருக்கிறது.

எமது நாட்டில் சில பௌத்த தேரர்களுக்கும் இவ்வாறு பணம் வருவதாக வெளிப்பட்டிருக்கிறது. நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முயற்சிக்கும்போது, மீண்டும் அழிப்பதற்கு சிலர் முயற்சிக்கின்றனர்.

தற்போது சிலர் பௌத்த மதத்தையும் தேரர்களையும் அகௌரவப்படுத்தி அழித்து விட முயற்சிக்கின்றனர். வெறுப்பூட்டும் பேச்சுக்களை இலத்திரனியல் ஊடகம், அச்சு ☞2

## நாணய நிதிய அதிகாரியுடன் ஜனாதிபதி ரணில் சந்திப்பு

விக்ரமசிங்கவிற்கும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் கென்ஜி ஒகமுராவிற்கும் இடையிலான சந்திப்பு நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இலங்கைக்கும் சர்வதேச நாணய நிதியத்திற்கும் இடையிலான வேலைத் திட்டத்தின் முன்னேற்றம் குறித்து இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டது. தற்போது நடைபெற்று வரும் கடன் மறுசீரமைப்பு பேச்சுக்கள் குறித்தும் ஆராயப்பட்டது.

நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க ☞2

## பல நிறுவனங்கள் ரணிலின் கீழ் வந்தன

ஜனாதிபதியின் கீழ் செயற்படும் நிதி, பொருளாதார உறுதிப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சின் நாட்டின் பல நிறுவனங்களைக் கொண்டுவரும் அதி விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த வர்த்தமானி அறிவித்தலில், கொழும்பு தாமரைக் கோபுரத்தை வணிக மாதிரி ஒன்றாக மாற்றி சுற்றுலா மத்திய நிலையமாக மேம்படுத்தல். ☞2

## நெல்சிப் திட்ட மோசடி குறித்து மீண்டும் விசாரணை ஆரம்பம்

### 26 குற்றச்சாட்டுக்கள் அடங்கிய பத்திரம் அனுப்பி வைப்பு

ந.லோகதயாளன்.

வடக்கு மாகாணத்தில் நெல்சிப் திட்டத்தின் கீழ் இடம் பெற்றதாகக் குற்றஞ்சசாட்டப் பட்ட மோசடி தொடர்பில் கொழும்பு ஆட்சியாளர்களால் மீண்டும் விசாரணை தொடங்கப்பட்டுள்ளது. அதில் சம்பபந்தப்பட்டார்கள் என்று கூறப்பட்ட இரு அதிகாரிகளுக்கு குற்றச்சாட்டுப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. 26 குற்றங்கள் அடங்கியதாகக் குற்றப் பத்திரம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் இடம்பெற்ற வடக்கு கிழக்கு உள்ளூராட்சிச் சேவைகள் மேம்படுத்தல் திட்டமத்தின (நெல்சிப்) திட்டத்தின்போது பல கோடி ரூபாய் ஊழல் செய்யப்பட்டதாக அரசியல் குற்றச்சாட்டு எழுந்தது. இதனைத் தொடர்ந்து இந்த மொசடி தொடர்பில் வடக்கு மாகாண சபை ஒரு முதற்கட்ட விசாரணையை நடத்தியது. அதில் மோசடி நிகழ்ந்திருப்பதாக அறிக்கையிடப்பட்டது.

அந்த அறிக்கை மேல் நடவடிக்கைக்காக கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டது. அங்கிருந்து 8 வருடங்களின் பின்னர் பூர்வாங்க விசாரணைகளை முன்னெடுப்பதற்கான நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது. அதன் முதற்கட்டமாக மோசடியில் தொடர்புள்ளவர்கள் என்று கூறப்பட்ட இரு அதிகாரிகளுக்கும் குற்றச்சாட்டுப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. பொதுச் சேவை ஆணைக் குழுவினால் இந்தக் குற்றப் பத்திரம் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுப் பத்திரத்திற்கு 14 வேலை நாள்களுக்குள் விளக்கமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. அளிக்கப்படும் விளக்கத்தின் அடிப்படையில் அதிகாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பில் தீர்மானிக்கப்படும்.

## சமூகச் செயற்பாட்டாளர் புருனோ பொலிஸாரால் நேற்று திடீர் கைது

### நடாஷாவின் வீடியோவைப் பகிர்ந்தாராம்





சமூகச் செயற்பாட்டாளர் புருனோ திவாகர குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் கணினி குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இக்கைது தொடர்பில் பொலிஸ் ஊடகப்பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்ததாவது:

நடாஷா எதிரிசூரியவினால் வெளியிடப்பட்ட கருத்தை சமூக ஊடகங்களில் பகிர்ந்தமைக்காக அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று காலை 10 மணியளவில் ☞2

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விளக்கம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் காணப்பட்ட தமிழ் அரசுக் கட்சியின் ஆதிக்கம், சமத்துவமின்மை, ஜனநாயகமின்மை, அதன் சில தலைவர்களின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகள் போன்றவற்றைக் களைந்து, தேர்தல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட ஒரு கூட்டணியாக இந்தப் புதிய ஜனநாயகக் கூட்டணி இயங்கும் என்று அறிவிக்கப்பட்டது. உள்ளூராட்சித் தேர்தல்கள் அறிவிக்கப்பட்ட நிலையில் இந்தப் புதிய கூட்டணியின் தலைவர்கள் கூட்டங்கள் அடுத்தடுத்து நடந்தன. ஒவ்வொரு கட்சியிலிருந்தும் தலா 4 பேரை உள்ளடக்கிய உயர் மட்டக் குழு ஒன்றும் நியமிக்கப்பட்டது. அந்தக் குழு இந்த அரசியல் கூட்டின் யாப்பு முதற்கொண்டு சட்ட திட்டங்களை வரையறை செய்யும் என்று தெரிவிக்கப்பட்டது. கூட்டின்தலைமைப் பதவியைச்சுழற்சி முறையில் ஒவ்வொரு கட்சிக்கும் வழங்குவது என்றும் கொள்கை முடிவு எட்டப்பட்டது.

இவையெல்லாம்தேர்தல் பரபரப்பில் வெகு விரைவாக நடந்தன. தேர்தலையொட்டி பரபரப்பாக இயங்கிய புதிய கூட்டு, ஒற்றுமை சீர்குலைந்து விட்டது, அதைச்சீர்குலைத்தது தமிழ் அரசுக் கட்சிக்குள் இருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன்தான், அவரது சொற்கேட்டு ஆடும் தமிழ் அரசுக் கட்சிக்கு ஒரு பாடம் படிப்பிக்க தமிழ் மக்கள் ஒற்றுமைக்கு வாக்களிக்க வேண்டும் என்றெல்லாம் பம்பரமாகச் சுழன்றாடியது. ஆனால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் திருகுதாளத்தால் தேர்தல் இனி எப்போது நடக்கும் என்பதே தெரியாத நிலை ஏற்பட்டுவிட்டது. உடனேயே ஆற்றுவெள்ளம் வடிந்தோடியதைப் போல இந்தப் புதிய ஜனநாயகக் கூட்டணியின்செயற்பாடுகளும் சோர்ந்து போய்விட்டன.

தேர்தல் காலவரையறையின்றி ஒத்தி வைக்கப்பட்டதன் பின்னர், கடந்த 3 இந்தப் புதிய கூட்டணியின் உயர் கட்டமைப்பு ஆகக் குறைந்தது ஒருதடவைதான் உத்தியோகபூர்வமாகக் கூடிப் பேசியிருக்கிறது. அதன் பின்னர் கூட்டத்தைக் கூட்டுமாறுஏனையகட்சியினர் கேட்டபோதும் ஏதாவது ஒரு காரணம்காட்டிரெலோஅந்தக் கூட்டத்தைக் கூட்டுவதைத் தவிர்த்து வந்திருக்கிறது. இன்னும்கூட அந்தக் கூட்டம் கூட்டப்படவில்லை.

இந்த நிலையில் ரெலோ செய்த வேலையால் முதலுக்கே மோசம் வந்துவிட்டது என்று கவலைப்படத் தொடங்கியிருக்கிறார்கள் கூட்டில் உள்ள ஏனைய கட்சிகளின் தலைவர்கள். நெடுங்கேணியின் நயினாமடுவில் சீன நிறுவனத்தின் தாய்லாந்து பினாமியின் பெயரில் சீனித் தொழிற்சாலை ஒன்றைத் தொடங்கும் ரெலோவின் முன்முனைப்புத்தான் அதற்கான காரணம். அதுவரையும் இந்தக் கூட்டணியில் உள்ள புளொட்தலைவர்சித்தார்த்தன், ஈபிஆர்எல்எவ் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் போன்றோர் வடக்கு கிழக்கில் சீனா காலூன்றுவதற்கு அனுமதிக்கமாட்டோம், இந்தியாவின் பாதுகாப்புக்குக் குந்தகமாக எதுவும் செய்ய மாட்டோம் என்று பகிரங்க அறிக்கைகள் விடுத்து வந்திருந்தனர். ஆனால், அந்த நிலைப்பாடுகளுக்கு எல்லாம் மாற்றாக வடக்குக்கு சீனாவை ரெலோவே வெற்றிலைபாக்கு வைத்து அழைத்து வருவதற்கு எடுத்த நடவடிக்கை அம்பலப்பட்டுப் போனதை அடுத்து இந்தியா இது விடயத்தில் கடுமையாக அதிருப்தியடைந்துள்ளது.

அண்மையில் இந்தக் கூட்டணிக்கட்சித்தலைவர்கள் சிலர் இந்தியத் தூதுவரை, தூதரக அதிகாரிகளைச் சந்தித்துப் பேசினர். அதில் ரெலோவின் முதுகில் குத்தும் நடவடிக்கைகுறித்தே இந்தியத் தரப்பில் அதிக கரிசனை காட்டப்பட்டிருக்கின்றது. இது குறித்துத் தனக்கு நெருக்கமானவர்களிடம் பேசியுள்ள புளொட் தலைவர் சித்தார்த்தன், "இனி அவர்கள் (இந்தியா) ஒருபோதும் எங்களை நம்பாது. அப்படிச் செய்துவிட்டார்கள்'' என்று கூறிக்கவலைப்பட்டிருக்கிறார். நெடுங்கேணியில் சீன நிறுவனம் தொழிற்சாலை அமைப்பது 90 சதவீதம் சாத்தியமில்லை, இந்தியா அதனை அனுமதிக்காது என்றும் தெரிவித்திருக்கும் அவர், ரெலோவை நம்பி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைவிட்டு வெளியேறி அவசரப்பட்டுவிட்டோமோ என்றும் அங்கலாய்த்திருக்கிறார்.

அண்மையில் இதே சீனி விவகாரம் குறித்து ஈபிஆர்எல்எவ் கட்சியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரனும் மறைமுகமாக ஓர் அறிக்கைவிட்டிருந்தார். அதில் சீனித் தொழிற்சாலைக்காக கரும்பு பயிரிட வெளிக்கிட்டாலும் சிங்களக் குடியேற்றங்கள்தான் இங்கு வரும், மகாவலித் திட்டத்தின் கீழ் அதுதான் நடக்கும் என்பதைக் கட்சிகள் உணரவேண்டும் என்று தெரிவித்திருந்தார். மறைமுகமாக ரெலோவுக்குத்தான் அவர் அந்தச் செய்தியை விடுத்திருந்தார்.

ஆக மொத்தத்தில் கூட்டணியில் உள்ள இரண்டு முக்கிய கட்சிகளும் சீனித் தொழிற்சாலை விடயத்தில் ரெலோவின் நடவடிக்கையால் பெரிதும் கவலையடைந்துள்ளனர். இந்தியாவைப் பகைத்துக்கொண்டு தங்களால் எந்த நகர்வையும் மேற்கொள்ளமுடியாதுஎன்பது இவர்களுக்குத் தெரியும். அப்படியொருநிலையெடுத்தால் இந்தியாவே தங்களுக்கு அரசியல் சமாதி கட்டிவிடும் என்பதும் அவர்களுக்குத் தெரியும். அதனால் இப்போது ஆப்பிழுத்த குரங்கின் நிலைக்கு வந்திருக்கிறார்கள் அவர்கள். இதன் அடுத்த கட்டமாக மீண்டும் அவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தொடர்பில் பேசுவதற்கான வாய்ப்புக்களையும் நிராகரிப்பதற்கில்லை. தமிழ் அரசுக் கட்சிக்குள்ளும் தலைவர் மாவை அணியினர் நாங்கள் இன்னும் கூட்டமைப்பிலிருந்து வெளியேறவில்லை என்று கூறிக்கொண்டிருக்கும் நிலையில் எதுவும் சாத்தியம்தான்.

**இடிமின்னல்**

## ஒளிபரப்பு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆட்சியை நிறுவுவதை நோக்கமாக கொண்டதாகும். இந் தச் சட்டமூலத்தினைக் கொண்டுவருதை கடுமையாக எதிர்ப்பதோடு, இது, செய்திகளை வழங்கும் ஊடகங்களை மட்டுமல்ல செய்திகளை அறிய முனையும் சாதாரண மக்களின் சுதந்திரத்தினையும் பாதிக்கின்றது - என்றார்.

**கஜேந்திரகுமார்**

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்ததாவது:

இந்த ஆட்சி நீடிப்பதே மோசடியாகும். அவ்வாறு மோசடியைச் செய்யும் ஓர் ஆட்சி உண்மைகள் வெளிவருவதை ஒருபோதும் விரும்பாது. ஆகவே உண்மைகளை வெளியிடும் ஊடகங்களை முழுமையாக அடக்குவதற்கே இவ்வாறான சட்டத்தினை கொண்டுவரமுயற்சிக்கின்றது. இதன் ஊடாக செய்திகள் வெளியிடப்படுவதற்கு முன்னதாகவே, அவற்றைத் தடுத்து நிறுத்தி அந்த செய்திகளுக்கான தகவல்களை வழங்குபவர்களை குறிவைப்பதை இலக்காக கொண்டேஇந்தச்சட்டம்கொண்டுவருவதற்கு முயற்சிக்கப்படுகின்றது - என்றார்.

**மனோகணேசன்**

தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோகணேசன் தெரிவித்ததாவது:

தற்போதைய ஆட்சி முதலில் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தினை கொண்டுவருவதற்கு முற்சித்தது. பின்னர் ஊழல் எதிர்ப்புச் சட்டத்தினைக் குறைபாடுகளுடன் கொண்டுவருதற்கு முயற்சித்தது. எனினும் இந்த இரு விடயங்களையும் வெளிச்சம்போட்டுக் காண்பித்து அவற்றை தடுத்து நிறுத்தியதில் ஊடகங்களின் பங்கு அதிகமாகவுள்ளது. ஆகவேதான்முதலில்ஊடகங்களை அடக்குவதற்கு ஆட்சியாளர்கள் முயல்கின்றனர். அவ்வாறான நிலைமையை ஏற்படுத்தினால் தமது செயற்பாடுகளை இலகுவாக முன்னெடுக்க முடியும் என்று இந்த ஆட்சி கருதுகின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடத்தில் ஒரு விடயத்தினைக் கூற விளைகின்றேன். எந்தச் சட்டமாக இருந்தாலும் அதனை இயற்றுவதற்கு முன்னதாக மக்கள் ஆணைபெற்ற ஆட்சி பதவியில் இருக்க வேண்டும். அந்த மக்கள் ஆணையைப் பெறுவதற்காக தேர்தலை நடத்துங்கள் - என்றார்.

**சரித்த ஹேரத்**

சுதந்திர மக்கள் காங்கிரஸின் உறுப்பினரும், பாராளுமன்ற உறுப்பினருமான கலாநிதி. சரித்த ஹேரத் தெரிவித்ததாவது:

தேசிய பாதுகாப்புக்கு பாதிப்பு ஏற்படுத்தப்பட்டால் அது தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றே இதுவரை காலமும் இருந்தது. ஆனால் தற்போது தேசிய பொருளாதாரத்திற்கு பாதிப்பு ஏற்படுத்தப்பட்டால் கவனம் செலுத்தப்படவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் தேசிய பொருளாதாரம் என்பதற்கு விளக்கம் கூறப்படவில்லை. ஆகவே அதற்கானவரையறை என்ன? ரணில் விக்கிரமசிங்க நினைப்பதா இல்லை சர்வதேச நாணய நிதியம் நினைப்பதா?

அதுவொருபுறமிருக்கையில் புதிய அலைவரிசைக்காக விண்ணப்பம் செய்யும் ஒருவர் ஆறு மாதங்கள் காத்திருப்பு பட்டியலில் இருப்பர். அவர்கள் முதலீடு, எத்தனை ஆண்டுகளுக்கு தொடர விரும்புகின்றார்கள் போன்ற விடயங்கள் குறிப்பிடப்படவேண்டும். ஆனால் இந்தச் சட்டத்தில் அவ்வாறு எதுவும் இல்லை. ஆகவே இந்தச்சட்டமூலத்தால் ஆட்சியாளர்களுக்கு மக்கள் ஆதரவு கிட்டாது. மாறாக வீடு செல்லவே நேரிடும் - என்றார்.

**ஹர்ஷ டி சில்வா**

ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி. ஹர்ஷ டி சில்வா தெரிவித்ததாவது;

சிலதிரைப்படங்கள்வெளியாகுவதற்கு முன்னதாக தணிக்கைக்குழுவிற்குச் செல்லும். அங்கே ஐந்து ஆறுபேர் தமது எஜமானார்களாக உள்ள அரசியல்வாதிகளுக்குஎதிரானவிடயங்களைதணிக்கைசெய்வார்கள் என்பது அனைவரும் அறிந்த விடயம்.

அதேபோன்று தான் ஊடகங்களில் தணிக்கையை ஏற்படுத்துவதற்காக அதிகாரசபை உருவாக்கப்படுகின்றது. இதன்மூலம் அதிகார சபையின் தலைவரால் ஊடக வெளியீடுகளை கட்டுப்படுத்த முடியும். அது ஜனநாயக விரோதமான செயற்பாடாகும் - என்றார்.

## பல ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொறியியல் உசாத்துணைச் சேவைகள் மற்றும் நிர்மாணப் பணிகள், இலங்கை டெலிகொம் கம்பனி மற்றும் அதன் நிர்வாகக் கம்பனிகள் மற்றும் இணைக் கம்பனிகள், கலம்பு லோட்டஸ் ரவர் மனேஜ்மென்ட் கம்பனி பிறைவேட்லிமிட்டெட், நோர்த் சிலிமிட்டட், வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா திரிபோச கம்பனி, கல்ஓயா பெருந்தோட்டக் (தனியார்) கம்பனி, தேசிய சோல்ட் கம்பனி, இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம், பரந்தன் இரசாயனக் கம்பனி, வரையறுக்கப்பட்ட பீ.சீ.சீ. கம்பனி, அரச பொறியியல் கூட்டுத்தாபனம், மஹிந்த ராஜபக்ஷ தேசிய ரெலி-சினிமா பூங்கா, வரையறுக்கப்பட்ட லங்கா ஜெனரல் டிரேடிங் கம்பனி ஆகியன உள்ளடங்குகின்றன.

இந்த நிறுவனங்களைத் தனியாருக்கு விற்கும் நோக்கத்தோடு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது என்று எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

## நாணய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான நிரந்தரப் பிரதிநிதி கலாநிதி சர்வத் ஜஹான் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.

## நள்ளிரவு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகரிக்கப்பட்டுள்ளது. ஒக்டேன் 95 ரக பெற்றோலின் புதியவிலை 385 ரூபாவாகும்.

லங்கா சுப்பர் டீசல் ஒரு லிற்றரின் விலை 10 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 340 ரூபாவாக அமைந்துள்ளது.

மண்ணெண்ணெய் விலை 50 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. இதற்கமைய, ஒரு லிற்றர் மண்ணெண்ணெயின் புதிய விலை 245 ரூபாவாகும்.

## மாணவிகளுடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்றுள்ளன.

இந்நிலையில் யாழ். மாவட்ட செயலகத்தில் இன்றைய தினம் புதன் கிழமை இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் இவ்விடயம் தொடர்பில் ஆராயப்பட்டதனை தொடர்ந்து , சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் தனியார் கல்வி நிலையங்களை சூழவுள்ள பகுதிகளில் பொலிஸாரின் கண்காணிப்பு இருக்கும் எனவும், பொலிஸாரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## நாட்டு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன் மூலம், தேசிய மாற்றத்திற்கான கொள்கைத் திட்டம் தொடர்பில் பொது மக்கள் தெளிவைப்பெற முடியும் என்பதுடன், எதிர்பார்க்கும் இலக்குகளை அடைவதற்கானசெயல்பாட்டு முன்மொழிவுகளும்ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் முன்வைக்கப்படவுள்ளன.

## இன, மத .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகம், டிக்டொக், முகப்புத்தகமென எந்த ஊடகங்களில் பிரசுத்தாலும் குற்றமாகும்.

என்றாலும் சமூக ஊடகங்களை கட்டுப்படுத்த அரசாங்கத்துக்கு முடியாது. சமூக ஊடகங்கள் ஊடாக மேற்கொள்ளப்படும் வெறுப்பூட்டும் பேச்சுக்கள் தொடர்பில் சட்ட ரீதியிலான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். ஆனால் சமூக ஊடகங்களை கட்டுப்படுத்த எமக்கு சட்டத்தை உருவாக்குவதற்கு முடியாது - என்றார்.

## சமூகச் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் கணினி குற்றத் தடுப்பு பிரிவிற்கு வருமாறு புருனோ திவாகர விற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அவர் நேரில் வருகை தந்த நிலையில் வாக்குமூலம் பெறப்பட்டது. பின்னர் அவர் நேற்று பிற்பகல் கைது செய்யப்பட்டார். அவரிடத்தில் தொடர்ந்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன - என்றார்.

## பாடசாலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டு 46 மாணவர்கள் இடைவிலகியபோதும் இதுவரை 4 மாணவர்கள் இடைவிலகியுள்ளனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்
076 443 80 22

English Classes
K.Ganash (BA.Pera)
Spoken English With Grammar
யாழ் நகரில் தனி வகுப்பு
G.C.E O/L, A/L, பட்டதாரிகள்
தொழில் புரிபவர்,
ஆர்வமுள்ளவர்களுக்கு
G.C.E.O/L Literature
077 766 8725



SPK Rock
Vacancies

QUALIFICATIONS:
• Degree from a recognized university (Management/Food Science/Project Management/ Country planning)
• Strong communication and organizational skills.
• Language Skills (English,Sinhala and Tamil)
• At least 1 year of experience in Food Industry and Other experience

Responsibilities: -
• Planning factory daily routines.
• Meeting customer's expectations and demands.
• Supervising the factory workers on the production floor.
• Maintaining high standards of the production line. .
• Implementing production strategies as per the requirements.
• Monitoring the factory operations.
• Taking corrective action as and when required.
• Resolving any factory-related issues.
• Assigning tasks to the factory staff. Creating and enforcing quality control standards.
• Implementing machine maintenance operating procedures.
• Suggesting improvements in the strategies.
• Preparing production schedules and reports.
• Presenting the reports to the higher management.
• Assisting the HR department in hiring.
• Providing training to the new employees.
• Inspecting the quality of the finished products.
• Maintaining a sound relationship with the clients

Send your application and CV to:
0212 291 888
info@spkrock.com
www.spkrock.com

காலைக்கதிர்
Kalaikkathir

# ஊடங்களையோ மற்றும் சமூக ஊடகங்களையோ ஒளிபரப்பு அதிகாரசபைச் சட்டம் கட்டுப்படுத்தாது

## நீதி அமைச்சர் விஜயதாஸ தெரிவிப்பு



ஒளிபரப்பு அதிகாரசபை சட்டம் கொண்டுவருவதன் மூலம் ஊடங்களையோ சமூக ஊடகங்களையோ அதன் மூலம் கட்டுப்படுத்த முடியாது.

மாறாக, ஊடகங்கள் மேற்கொண்டுசெல்லும்நடவடிக்கையை மேலும் சிறப்பாகக் கொண்டு செல்வதற்கு உதவும் வகையிலேயே இந்தசட்டமூலம்தயாரிக்கப்பட்டிருக்கிறது என நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

அரசாங்கம் கொண்டுவர இருக்கும் ஒளிபரப்பு அதிகாரசபை சட்டம் ஊடகங்களை அடக்குவதற்கான நடவடிக்கை எனத் தெரிவிக்கப்படும்கருத்துதொடர்பாக குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாகஅவர்தொடர்ந்து தெரிவிக்கையில் -

ஊடகங்களை அடக்குவதற்கு அரசாங்கத்துக்கு எந்த தேவையும் இல்லை. அவ்வாறானஎண்ணமும் இல்லை. என்றாலும் தற்போது தயாரிக்கப்பட்டு வரும் ஒளிபரப்பு அதிகாரசபைசட்டமூலம்தொடர்பில் சரியான தெளிவில்லாமலே சிலர் இவ்வாறான கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

அத்துடன் ஒளிபரப்பு அதிகார சபை சட்டம் கொண்டுவருவதன் மூலம் ஊடங்களையோ சமூக ஊடகங்களையோ அதன் மூலம் கட்டுப்படுத்த முடியாது.

ஆனால், அரசாங்கம்தயாரித்து வரும் ஒளிபரப்பு அதிகாரசபை சட்டமூலம், ஊடகங்கள் முன்னெடுத்து வரும் நடவடிக்கைகளை மேலும் சிறப்பாக முன்னெடுத்துச்செல்வதற்கான உதவியாக அமையும் வகையிலே தயாரிக்கப்பட்டிருக்கிறது. அதேநேரம் ஒளிபரப்பு அதிகாரசபைசட்டமூலம்தொடர்பாக அனைத்துஊடகங்களுடன்எதிர்வரும் காலங்களில்கலந்துரையாடுவோம்.

மேலும் மக்கள் மத்தியில் நல்லிணக்கத்தை இல்லாமல் செய்பவர்களுக்கு சில பிரதான ஊடகங்கள் மூலம் அவர்களுக்கு பிரபல்லியம்பெற்றுக்கொடுக்கின்றன.

அதனால் இன மத நல்லிணக்கத்தை இல்லாமல் செய்வதற்கு சமூகஊடகங்களில்பிரபல்லியமாக இருப்பவர்களுக்கு உதவி செய்யவேண்டாம். ஏனெனில் இவர்களுக்குவெளிநாடுகளில்இருந்து உதவிகள் கிடைத்து வருவதாக எமக்குத்தகவல்கிடைத்திருக்கிறது.

எமது நாட்டில் சில பௌத்த தேரர்களுக்கும் இவ்வாறு பணம் வருவதாக வெளிப்பட்டிருக்கிறது. நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முயற்சிக்கும்போது, மீண்டும் அழிப்பதற்குசிலர்முயற்சிக்கின்றனர்.

அதேபோன்று தற்போது சிலர் பௌத்தமதத்தையும்தேரர்களையும் அகௌரவப்படுத்தி அழித்துவிட முயற்சிக்கின்றனர்.

வெறுப்பூட்டும் பேச்சுக்கள் இலத்திரனியல் ஊடகம், அச்சு ஊடகம், டிக்டொக், முகப்புத்தகம்என எந்த ஊடகங்களில் பிரசுத்தாலும் குற்றமாகும். என்றாலும் சமூக ஊடகங்களைக் கட்டுப்படுத்த அரசாங்கத்துக்கு முடியாது.

சமூக ஊடகங்கள் ஊடாக மேற்கொள்ளப்படும்வெறுப்பூட்டும் பேச்சுக்கள்தொடர்பில்சட்டரீதியிலான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். ஆனால், சமூக ஊடகங்களைக் கட்டுப்படுத்த எமக்கு சட்டம் அமைக்க முடியாது. - என்றார். (05)

# தாமரைக் கோபுரத்தில் பெயர் செதுக்கிய இளம் ஜோடி கைது



கொழும்பில் உள்ள தாமரை கோபுரத்திற்குச்சென்றஇளம்ஜோடி , கோபுரத்தின் உச்சியில் உள்ள சுவரில் தங்களின் பெயர்களை செதுக்கும்போதுபிடிபட்டநிலையில் செவ்வாய்க்கிழமை மாலை பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டனர்.

தாமரைக் கோபுரத்திற்குச் செல்லும்சிலர், அதன்மீதுபெயர்கள் அல்லது முதலெழுத்துக்களை செதுக்குவதன் மூலம் தொடர்ந்து சேதப்படுத்துவதனால் பெரும் பராமரிப்புச்செலவுஏற்பட்டுள்ளதாக பாதுகாப்பு அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

தாமரைக் கோபுரம் பொதுமக்களுக்காகத் திறக்கப்பட்டதைத் தொடர்ந்து, கோபுரத்திற்கு வரும் பார்வையாளர்கள் அதன் சொத்துக்களை சேதப்படுத்தினால் அவர்களுக்குஎதிராககடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தாமரைக் கோபுரத்தின் பாதுகாப்பு அதிகாரிகள் அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

# நாட்டு மக்களின் பிரச்சினைகளை தீர்க்க அரசு முன்வருவதேயில்லை

## ஹரிணி அமரசூரிய வருத்தம்



மக்களின் உண்மையான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் முன்வருவதில்லை என தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்றஉறுப்பினர்ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியொன்றிலேயேஅவர்இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன்மக்களின்பொருளாதாரஅசௌகரியத்தைவேறுவிடயங்களால் தூண்டிவிட அரசாங்கம் முயற்சிப்பதாகவும்குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேசநாணயநிதியத்தால் கிடைக்கப்பெறும் கடனுதவிகள் மூலம் பொருளாதாரப் பிரச்சினைகளை நிவர்த்தி செய்ய முடியும் என அரசாங்கம் முன்னதாக உறுதியளித்திருந்தது.

இருப்பினும் பொருளாதார நெருக்கடிக்குத்தீர்வுகிடைக்கப்பெற்ற போதிலும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை பெற்றுக்கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வரவில்லை எனவும் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூரிய குற்றஞ்சுமத்தியுள்ளார். (05)

# ஜனநாயகக் கூட்டணியினர் கிழக்கு ஆளுநருடன் சந்திப்பு



கிழக்கு மாகாணத்தில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன்மற்றும்ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் பங்காளிக் கட்சிகளின் பிரதிநிதிகள், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானை சந்தித்து கலந்துரையாடினர்.

இந்தக் கலந்துரையாடலில் கிழக்கு மாகாணத்தில் காணப்படும் மாகாண, மாவட்ட ரீதியான பிரச்சினைகள்தொடர்பாகஆளுநரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டு வரும் கொடுப்பனவுகளை அதிகரிப்பது தொடர்பாகவும், உள்ளூராட்சி மன்றங்கள் உட்பட அரசதிணைக்களங்களில் அமைய அடிப்படையில் தொழில் புரியும் ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குதல் தொடர்பாகவும் தெரிவிக்கப்பட்டது.

மட்டகளப்பு மாவட்டத்தில் குருமன்வெளி மண்டூர், குருக்கள் மடம் அம்பாலந்துறை, சந்திவெளி திகிலிவெட்டை போன்ற பிரதேசங்களை இணைக்கும் ஆற்றின் இடையில் இருக்கும் பாதைகளுக்கு அறவிடப்படும் கட்டணங்களைநீக்குதல், பண்ணையாளர்களின்கால்நடைகள்துன்புறுத்தப்படுவதற்கு எதிராக நடவடிக்கை எடுத்தல்போன்றபலகோரிக்கைகள் ஆளுநரிடம் முன்வைக்கப்பட்டன.

இந்தப் பிரச்சினைகளைக் கவனத்திற்கொண்ட ஆளுநர், குறித்த இடர்பாடுகள் தொடர்பில் ஆராய்ந்துதீர்வுவழங்குவதற்கான நடவடிக்கைகளைமேற்கொள்வதாக உறுதியளித்தார். (05)

# ஆஸ்திரேலியா அரசின் ஆதரவை இலங்கை அரசு வரவேற்றுள்ளது

## ஷெஹான் சேமசிங்க தெரிவிப்பு



ஆஸ்திரேலியா அரசாங்கத்தின் தொடர்ச்சியானஆதரவைஇலங்கை வரவேற்றுள்ளதுஎனநிதிஇராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான ஆஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் பௌல் ஸ்டீபன்ஸ் உடன், நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க கலந்துரையாடலிலே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வர்த்தக மற்றும் முதலீட்டு உறவுகளை வலுப்படுத்த இதன்போது பொருளாதார சீர்திருத்தங்கள், சர்வதேசநாணய நிதிய திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் கடன் நடைமுறைகள் தொடர்பாக இதன் போது கலந்துரையாடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது, (05)

# மருந்துகளின் விலைகளை குறைப்பதற்கு ஏற்பாடுகள்

## சுகாதார அமைச்சர் கெஹலிய பணிப்புரை

டொலரின் பெறுமதி குறைவடைந்து வருகின்றமைக்கு சமாந்தரமாக மருந்துகளின் விலைகளையும்மிகவிரைவாகக் குறைக்கநடவடிக்கைஎடுக்குமாறு சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

அதற்கமைய டொலரின் பெறுமதியுடன் ஒப்பிடுகையில் மருந்துகளின் விலைகளைக்குறைந்த பட்சம் 15 சதவீதத்தால் குறைக்கப்பட வேண்டுமென அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.



அதற்கமைய பொது மக்களுக்குதட்டுப்பாடின்றி நியாயமான விலையில் மருந்துகளை வழங்குவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும்என்றும்அதிகாரிகளுக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் உரிய திணைக்களங்கள் மற்றும் விலை நிர்ணய குழுக்கள் உள்ளிட்டவற் றின் அதிகாரிகளுடன் துரிதமாகக்கலந்துரையாடி தீர்மானங்கள்எடுக்கப்படவேண்டும் என்றும் சுகாதார அமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளார். (05)



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சட்டம் எல்லோருக்கும் சமன் இல்லையா?

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று நடந்தது. அதில் பேசப்பட்ட முக்கிய விடயங்களில் ஒன்று, மயிலிட்டியில் சட்டத்திற்குப் புறம்பாக அமைக்கப்பட்ட திஸ்ஸ விகாரை பற்றியது. மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கும் மாவட்டத்தின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையே இது தொடர்பில் கடும் வாக்குவாதங்கள் நடந்துள்ளன.

நாடாளுமன்ற உறுபபினர்களான சிவஞானம் சிறிதரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், அங்கஜன் இராமநாதன் ஆகியோருக்கும் அமைச்சருக்கும் இடையேதான் இந்த வாதப்பிரதி வாதங்கள் இடம்பெற்றன. ஒரு கட்டத்தில் திஸ்ஸ விகாரை அமைக்கப்பட்டது சட்டத்திற்குப் புறம்பானதுதான் என்று அமைச்சர் ஏற்றுக்கொண்டார். ஆனால் அங்கு விகாரை கட்டி முடிக்கப்பட்டுவிட்டதால் இது தொடர்பில் ஜனாதிபதியுடன் பேசுவோம் என்றார்.

இங்கேதான் சட்டம் அனைவருக்கும் சமனில்லையா என்கிற கேள்வி எழுகின்றது. விகாரை கட்டப்பட்டது தவறானது, அனுமதியற்றது, சட்டத்திற்குப் புறம்பானது என்று தெரிந்துவிட்டால் அதற்கெதிராக நடவடிக்கை எடுக்கவேண்டியதுதானே அரச அதிகாரிகளினதும் அரசியல் தலைவர்களதும் கடமை. அதெப்படி, அதிகார முள்ளவர்களுடன் பேசி இந்த விடயத்தை சமரசம் செய்துகொள்ளலாம் என்று சொல்லமுடியும்? இதே போன்று சட்டத்துக்குப் புறம்பாக ஒரு சாமான்யன் கட்டம் அமைத்திருந்தால் இதே அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் சும்மா இருந்திருப்பார்களா? தங்கள் அதிகாரத் திமிரைக்காட்டி அந்த சட்டத்துக்குப் புறம்பான கட்டத்தைச் சுக்குநூறாக்கியிருக்க மாட்டார்களா? அல்லது பிக்குள் என்றால் எந்தத் தவறை வேண்டுமானாலும் செய்யலாம் என்று சட்டத்தில் ஏதாவது சிறப்பு ஏற்பாடுகள் இருக்கின்றனவா?

திஸ்ஸ விகாரை சட்டத்துக்குப் புறம்பாகக் கட்டப்பட்டது மட்டுமல்ல, அந்த இடத்தில் விகாரை கட்டக்கூடாது என்று பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் என்பவற்றில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட பின்னரும் – அதாவது அங்கு விகாரை கட்டுவது சட்டத்துக்குப் புறம்பானது என்று நன்கு தெரிந்துகொண்டே – அமைக்கப்பட்டது. தெரியாமல் செய்த தவறையே நீதிமன்றங்கள் மன்னிப்பதில்லை. அப்படியிருக்கும்போது தெரிந்தே –வேண்டுமென்றே – அதிகாரத்திமிரில் – இனவாதத்தின் உச்சத்தில் செய்யப்பட்ட ஒரு காரியத்தை எப்படி நியாயப்படுத்த முடிகிறது ஓர் அமைச்சரால்?

இந்த விகாரையை அமைப்பதற்கு அடிக்கல் நட்டவர் அப்போதைய தரைப் படைத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா. தரைப் படையினர் மூலம்தான் விகாரை கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. ஓர் அரச அதிகாரி இப்படிப்பட்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவது தவறில்லையா? அப்படித் தவறிழைத்தவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவது அவசியமில்லையா? அப்படியானால் எந்தவொரு அதிகாரியும் யாருடைய நிலத்தையும் ஆக்கிரமித்துக் கட்டடம் அமைத்துக்கொள்ளலாம், அது பற்றி சட்டமோ, ஆட்சியாளர்களோ, அதிகாரிகளோ எதுவும் கேட்கமாட்டார்கள் என்பதுதான் நிலைப்பாடா?

மக்களுக்குப் பதில் சொல்லவேண்டும் அமைச்சரும் அரசும் அதிகாரிகளும். கண்முன்னே அதிகாரம் படைத்தவர்கள் சட்டத்தை மீறும்போது அதனை ஏற்றுச் சமாளித்துச் செல்பவர்கள் சமானியர்கள் வயிற்றுப் பிழைப்புக்காக ஏதாவது சட்டமீறலில் ஈடுபட்டால் மட்டும் ஏன் பொங்கி எழுந்து சட்டத்தை நிலைநாட்டுகின்றோம் என்று ஆவேசம் கொள்கிறீர்கள்? சட்டம் அனைவருக்கும் சமனில்லை என்பதால்தானே!

# ஜெரோம், நடாஷாவின் பின்புலத்தில் அரசியல் நிகழ்ச்சி நிரல் உள்ளனவா?

## சந்தேகம் வெளியிடுகிறார் நளின் பண்டார



மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் வகையில் கருத்துக்களை வெளியிட்ட ஜெரோம் பெர்னாண்டோ மற்றும் நடாஷா ஆகியோரின் பின்னணியில் உள்ளவர்கள் யார் என்பதை கண்டுபிடிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதன் பின்புலத்தில் அரசியல் நிகழச்சி நிரல் காணப்படுகின்றதா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

நாட்டில் மீண்டும் இன மற்றும் மதநல்லிணக்கத்தைப் பற்றி பேச வேண்டிய சூழல் உருவாகியுள்ளது. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவி விலகுமாறு வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்ட போது இவை உயர் மட்டத்தில் காணப்பட்டன. எவ்வித பேதமும் இன்றி அனைவரும் ஒன்றிணைந்ததாலேயே அவரை பதவி விலகச் செய்ய முடிந்தது.

அந்த நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கும் வகையிலேயே தற்போது சில குழுக்கள் திட்டமிட்டு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

மதங்களை நிந்திக்கும் வகையில் கருத்துக்களை வெளியிடுபவர்களின் பின்னணியில் உள்ளவர்கள் யார் என்பதைக் கண்டுபிடிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறான கருத்துக்களை வெளியிடுபவர்களிடம் நிகழ்ச்சி நிரலொன்று காணப்படுகிறது. அந்த நிகழ்ச்சி நிரல்கள் அரசியலை நோக்கமாகக் கொண்டவையாகும். மீண்டும் மக்கள் மத்தியில் பிளவுகளை ஏற்படுத்தி ஆட்சியைக் கைப்பற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்ற சந்தேகம் எழுகிறது.

சமூகத்தில் அமைதியை சீர்குலைக்கும் வகையில் செயற்படும் இவ்வாறான நபர்களுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும். 2019 ஐ போன்று அழிவு ஏற்பட இடமளிக்காது அரசாங்கம் துரிதமாக செயற்பட வேண்டும்.

சர்வமதத் தலைவர்கள், நாடாளுமன்றம் மற்றும மக்களுக்கு இது தொடர்பில் தெளிவுபடுத்த வேண்டும். உண்மையில் இதன் பின்னணி என்பது தொடர்பில் பொறுப்புள்ள எதிர்க்கட்சியாக நாமும் தேடிக் கொண்டிருக்கின்றோம். - என்றார். (05)

# மஹிந்த - ரணில் இடையில் எவ்வித போட்டிகளுமில்லை

## ஜோன்ஸ்டன் பெர்னான்டோ எம்.பி. தெரிவிப்பு



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் எவ்வித போட்டியுமில்லை. ஜனாதிபதி சிறப்பாக செயல்படுகிறார். நாட்டு மக்கள் மாற்றம் ஒன்று தேவைப்படுகிறது என்கிறார்கள்.

பெரும்பாண்மையான மொட்டுக்கட்சியினர் வாக்களித்தே அவரை நியமித்துள்ளோம். அவர் சரியாக வழிநடத்துகிறார் என முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ வடமேல் ஆளுநரை சந்தித்து கலந்துரையாடிய பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

என்னுடைய முன்னாள் தலைவர் பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்துக் கொண்டு செல்கிறார். மஹிந்த ராஜபக்ஷ 30 வருட கால யுத்தத்தை வெற்றிக்கொண்டு நாட்டில் பாரிய அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுத்தவர்.

சீனாவுக்கு அடுத்ததாக எமது வளர்ச்சி வேகம் காணப்பட்டது. மஹிந்த ராஜபக்ஷ தேர்தலில் போட்டியிட முடியாத அளவில் அரசமைப்பை மாற்றினார்கள். மஹிந்த ராஜபக்ஷவுக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் எவ்வித போட்டிகளுமில்லை.

ஜனாதிபதி சிறப்பாக செயற்படுகிறார். நாட்டு மக்கள் மாற்றம் ஒன்று தேவைப்படுகிறது என்கிறார்கள். பெரும்பான்மையான மொட்டு கட்சியினர் வாக்களித்தே அவரை நியமித்துள்ளோம். அவர் சரியாக வழிநடத்துகிறார் என நினைக்கிறேன்.

மேலும் நாமலுக்கு பிரதமர் பதவி வழங்கப்படவிருக்கிறதா? என ஊடகவியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு அவர்,

அவ்வாறு எந்தவொரு பேச்சுகளும் இடம்பெறவில்லை. பிரதமர் ஒருவர் இருக்கிறார். இவை அனைத்தும் பிரச்சினைகளையும், குழப்பங்களை ஏற்படுத்தும் கதைகள். நாமல் அதற்கு அகப்படமாட்டார். - என்றார். (05)

# மலையக மக்கள் முன்னணியின் பிரதிதலைவர் லோரன்ஸ் இறப்பு



மலையக மக்கள் முன்னணியின் பிரதித்தலைவர் லோரன்ஸ் சுகவீனமடைந்திருந்த நிலையில் செவ்வாய்க்கிழமை காலமானார். மசமகால மலையக அரசியல் செயற்பாட்டாளரும் அரசியல் ஆய்வறிஞருமான அ.லோரன்ஸ் கண்டி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் காலமானார்.

அமரர் லோரன்ஸ் அவர்கள் தனது ஆரம்பகாலக் கல்வியைத் தலவாக்கலை ஹொலிரூட் தோட்ட பாடசாலையிலும் க.பொ.த. சாதாரண தரத்தை தலவாக்கலை சென்பெற்றிக்ஸ் கல்லூரியிலும் பட்டப்படிப்பை கொழும்புப் பல்கலைகழகத்திலும் மேற்கொண்டிருந்தார்.

கல்லூரி காலத்திலேயே தோழர் என்.சண்முகதான் தலைமையில் இயங்கிய கம்மியுனிஸ்ட் கட்சியோடு தொடர்புகொண்டு இயங்கியவர்.

அதன் பின் கடந்த 1970 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட கருத்துமுரண்பாடுகளையடுத்து சண்முகதானிடமிருந்து விலகி தோழர் காமினியப்பா மற்றும் கௌரிகாந்தன் தலைமையில் இயங்கிய கிழைக்காற்று இயக்க நடவடிக்கைகளில் ஈடுபட்டு கடந்த 1974 ஆம் ஆண்டு அரசியல் காரணங்களுக்காக சிறை சென்றார்.

அதனைத்தொடர்ந்து 1977 ஆம் ஆண்டு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடந்த இலங்கை ஆசிரிய சங்க மாநாட்டில் பி. ஏ காதர் மற்றும் கௌரிகாந்தன் ஆகியோருடன் இணைந்து வடக்கு, கிழக்கு தமிழ் மக்களும் மலையக தமிழ் மக்களும் முஸ்லீம் மக்களும் தனியான தேசிய இனம் என்ற கருத்தை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டதில் காதரோடு இணைந்து செயற்பட்டார். காதர் மற்றும் தர்மலிங்கம் ஆகியோரோடு மலையக வெகுஜன இயக்கத்தின் ஸ்தாபக உறுப்பினர்களில் முக்கிய உறுப்பினராக செயற்பட்டார்.

1980 ஆண்டில் தேசிய இளைஞர் சேவை மன்றத்தில் இளைஞர் சேவை அலுவலராக இணைந்து நுவரெலியா மாவட்ட இளைஞர் சேவை அலுவலராக சுமார் 15 வருடங்கள் அரசாங்க சேவையிலும் கடமையாற்றினார்.

1980 ஆம் ஆண்டில் மலையக வெகுஜன இயக்கத்தின் வெளியீடான 'விடுவு' என்ற பத்திரிக்கையின் ஆசிரியராகவும் இருந்துள்ளார். யுவிடெப் என்ற அரச சார்பற்ற நிறுவனத்தில் ( மலையக தொழிலாளர் தகவல் அபிவிருத்தி நிறுவனம்) தலைவராகவும் பிரதான இணைப்பாளராகவும் செயற்பட்டார்.

கடந்த 1989 ஆம் ஆண்டிலிருந்து மலையக மக்கள் முன்னணியில் இணைந்து செயற்படுவதோடு அதன் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவராகவும், அந்தக்கட்சியின் உப தலைவராக இருந்த தர்மலிங்கம் காலமாகிய பின் அவரின் இடத்திற்கு உப தலைவராக நியமிக்கப்பட்டு தற்போதும் மலையக மக்கள் முன்னணியின் பிரதி தலைவராக செயற்பட்டுவந்தார்.

பல்பரிமான அனுபவங்களை கொண்ட லொரன்ஸ் இனப்பிரச்சினை, மனித உரிமைகள் தொடர்பாக தாய்லாந்து, ஜேர்மன், மலேசியா போன்ற வெளிநாடுகளில் நடைபெற்ற செயலமர்வுகளில் மலையகதமிழ்மக்கள் சார்பாக பங்குபற்றியுள்ளதோடு அரசியல் தீர்வில் மலையகதமிழ்மக்கள் பிரச்சனையை வலியுறுத்தி பல ஆய்வு கட்டுரைகளையும் எழுதியுள்ளார். (05)


OKAYA
ELECTRIC VEHICLES
dsl
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
வண்ணத்தெரிவுகள்:
இந்தியாவில் அதி வேகமாக
விற்பனையாகும் மின்சார வாகனம்
2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555

காலைக்கதிர்
Kalaikkathir

# நாட்டில் நீதியை நிலைநிறுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுங்கள்

## சட்டத்தரணிகள் சங்கத்திடம் ஜூலி சங் வலியுறுத்து



இலங்கைக்கான அமெரிக்கா தூதுவர் மற்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் கௌசல்யா நவரத்ன ஆகியோருக்கிடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது நல்லாட்சியை நிலைநிறுத்துவதற்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் பங்கு மிகவும் முக்கியம் என இலங்கைக்கான அமெரிக்கா தூதுவர் ஜூலி சங் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கைக்கான அமெரிக்கா தூதுவர் ஜூலி சங் தனது உத்தியோகபூர்வ ருவிட்டர் பக்க பதிவொன்றின் மூலம் குறித்த விடயத்தை தெரிவித்துள்ளார். ஒரு வலுவான சட்டத்துறை அனைத்து பிரஜைகளும் நீதியைப் பின்தொடர்வதை ஊக்குவிக்கிறது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அத்துடன் நாட்டின் நீதியை நிலைநிறுத்துவதற்கான வேலைத்திட்டங்களை தொடர்ந்தும் முன்னெடுக்குமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்திடம் அவர் கோரிக்கை விடுததுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. (05)

# காணாமல்போன இளம் யுவதி கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு

இரண்டு நாட்களாகக் காணாமல்போயிருந்த இளம் யுவதி ஒருவர் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் மாத்தளை - ரத்தோட்டையில் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 28 ஆம் திகதி வீட்டிலிருந்து காணாமல்போயிருந்த 21 வயதுடைய குறித்த யுவதியை அவரின் குடும்பத்தினர் தேடி வந்திருந்த நிலையில், நேற்று (30) மாலை வீட்டுக்கு அருகிலுள்ள பாழடைந்த கிணற்றிலிருந்து அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த யுவதி பெற்றோருடன் முரண்பட்டிருந்த நிலையிலேயே வீட்டிருந்து காணாமல்போயிருந்தார் எனவும், அதன் காரணமாக அவர் காணாமல்போயிருந்த தகவலைப் பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருக்கவில்லை எனவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்நிலையில், யுவதி கிணற்றில் விழுந்து தற்கொலை செய்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

எனினும், யுவதியின் சடலம் மீதான உடற்கூற்றுப் பரிசோதனை இன்று நடைபெறவுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (02)

# கசிப்பு அருந்திய இளைஞர் இரத்த வாந்தி எடுத்து சாவு!

யாழ்ப்பாணத்தில் கசிப்பு அருந்திய இளைஞர் ஒருவர் இரத்த வாந்தி எடுத்து உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புங்குடுதீவுப் பகுதியில் நேற்று (30) இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

நிறை போதையில் இருந்த இளைஞர் திடீரென இரத்த வாந்தி எடுத்துள்ளார். அவரை உறவினர்கள் வைத்தியசாலையில் சேர்த்த நிலையில், அவர் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் ஊர்காவற்துறைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். அதேவேளை, புங்குடுதீவுப் பகுதியில் கசிப்பு உள்ளிட்ட போதைப்பொருள் பாவனைகள் அதிகரித்துள்ளன எனவும், கசிப்பு உள்ளிட்டவை வன்னிப் பிரதேசங்களில் இருந்து அங்கு கொண்டுவந்து விற்பனை செய்யப்படுகின்றன எனவும், அவ்வாறு கசிப்பைக் கடத்தி வந்து விற்பனை செய்பவர்கள் தொடர்பில் பொலிஸாரிடம் முறையிட்டும் தகுந்த சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை எனவும் அப்பகுதி மக்கள் கவலையுடன் தெரிவித்தனர். (02)

# இறக்குமதி செய்யப்படும் கருவாடு பழங்களில் கன உலோகங்கள்!



தேசிய உணவுப் பாதுகாப்பு ஆய்வின் அடிப்படையில் இறக்குமதி செய்யப்பட்ட பல பழ மாதிரிகள் மற்றும் கருவாடுகளில் ஈயம் உள்ளிட்ட கன உலோகங்கள் கலந்திருப்பது தெரியவந்துள்ளதாக சுகாதார அமைச்சின் உணவுக் கட்டுப்பாட்டுப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

அதற்கமைய ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில், இறக்குமதி செய்யப்படும் நெத்தலி மற்றும் கருவாட்டு வகைகள் மற்றும் பழங்களில் ஈயம் மற்றும் ஆர்சனிக் போன்ற கன உலோகங்களுக்கான சோதனையை இலங்கை அரசாங்கம் கட்டாயமாக்கியுள்ளது.

இறக்குமதி செய்யப்படும் அனைத்து உணவுப் பொருள்களிலும் கல உலோகங்களுக்கான பரிசோதனையை ஏற்றுமதி செய்யும் நாட்டிலிருந்து அங்கீகாரம் பெற்ற மற்றும் சுதந்திரமான ஆய்வகத்திலிருந்து அறிக்கையைப் பெறுமாறு அனைத்து பழ இறக்குமதியாளர்களுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த பண்டங்களில் அனுமதிக்கப்பட்ட குறைந்த பட்ச அளவைவிட அதிகமாக இல்லை என்பதை உறுதிப்படுத்துமாறு உணவுக் கட்டுப்பாட்டுப் பிரிவு இறக்குமதியாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

சில இறக்குமதி செய்யப்பட்ட பழங்களில் ஆபத்தான அளவு ஈயம் உள்ளது என்றும் இது மிகவும் நச்சுத்தன்மை வாய்ந்த கன உலோகம் என்றும் தெரியவந்ததை அடுத்து, இறக்குமதி செய்யப்படும் கருவாடுகள் மற்றும் பழங்களில் ஈயம் மற்றும் ஆர்சனிக் உள்ளிட்ட கன உலோகங்கள் உள்ளனவா என்று சோதிக்கப்படுவதை கட்டாயமாக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. (05)

# இலங்கையில் தங்கத்தின் விலை சடுதியாகக் குறைவு

## இலங்கையில் தங்கத்தின் விலை குறைவடைந்துள்ளது.




இதற்கமைய இன்று 22 கரட் தங்கம் ஒரு பவுண் ஒரு இலட்சத்து 49 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

22 கரட் தங்கம் ஒரு பவுண் கடந்த வாரம் ஒரு இலட்சத்து 54 ஆயிரத்து 500 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது.

இதேவேளை கடந்த 26 ஆம் திகதி ஒரு இலட்சத்து 67 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை

# ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் ஓகஸ்ட்டில்

2022 ஆம் கல்வி ஆண்டின், ஜிசீஈ உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள், எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் வெளியிடப்படும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

'63 பாடவிதானங்களுக்கான விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அவற்றில் 9 பாடவிதானங்களின், விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

அடுத்த கட்டமாக, கடந்த 19 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட, 13 பாடவிதானங்களின் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன.

அதேநேரம், மேலும் பல பாடவிதானங்களின் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள், ஜிசீஈ சாதாரணதரப் பரீட்சை நிறைவடைந்த பின்னர் ஆரம்பிக்கப்படவுள்ளன. விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள், ஜூலை மாதம் நிறைவடைந்த பின்னர், ஓகஸ்ட் மாதமளவில், உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிட எதிர்பார்த்துள்ளோம். இதேநேரம், விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளுக்கு வழங்கப்படும் கொடுப்பனவை அதிகரிக்குமாறு திறைசேரியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அனுமதி கிடைத்த பின்னர் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.' - என்றார். (02)

# முல்லைத்தீவைச் சேர்ந்த இருவர் போதை மாத்திரைகளுடன் கைது



முல்லைத்தீவைச் சேர்ந்த இருவர் பேலியகொடையில் வைத்து 400 போதை மாத்திரைகளுடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலை அடுத்து, பேலியகொடை, துட்டகைமுனு பிரதேசத்தில் நேற்று இரண்டு சுற்றிவளைப்பு தேடுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது, போதையூட்டும் குளிசைகள் 400 ஐ வைத்திருந்த குற்றச்சாட்டின்கீழ் குறித்த இருவரும் கைது செய்யப்பட்டனர்.

28 வயதான இருவரும் முல்லைத்தீவைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவித்த பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (02)




# தாய்லாந்து பறந்தார் பிரதமர்



பிரதமர் தினேஷ் குணவர்தன உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு தாய்லாந்து சென்றுள்ளார்.

பிரதமர் நேற்றுக் காலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து தாய்லாந்து நோக்கிப் புறப்பட்டுள்ளார்.

பிரதமருடன் 11 பேர் தாய்லாந்துக்குச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (02)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.06.2023இல் வெளியிடப்பெற்றது.

இத்துடன் நேற்றைய மாலைப்பதிப்பின் பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 04

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 15 செவ்வாய்க்கிழமை 30.05.2023 கதிர் 73

## பிரபல நகைச்சுவையாளர்களின் குடும்பங்களுக்கு கொலை மிரட்ட

பிரபல சிங்கள நகைச்சுவையாளர்களான லக்மால் சூரிய ான் அரோசா ஆகியோரின் குடும்பங்களுக்குக் கொ மிரட்டல் விடுக்கப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்படுகின்றது. தொடர்பில் லக்மாலின் மனைவி தனது பிள்ளைகள் சகி கொழும்பு குற்றப் புலனாய்வுப் பணியகத்திற்குச் செ முறையிட்டுள்ளார்.

தனி நிலை நகைச்சுவையாளர் (ஸ்டான்டப் கொமேடி நடாா எதிரிசூரிய கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவரு தம்மைத் தொடர்புபடுத்தி இந்தக் கொலை மிரட்டல்கள் கும்பல்களால் இந்தக் கொலை மிரட்டல்கள் விடுக்கப்படுகின் என்று லக்மால் மற்றும் ஷான் தெரிவித்துள்ளனர்.

2

## போதகர் ஜெரோமின் மனு மீது ஜூன் 5 விசாரணை



தான் கைது செய்யப்படுவதைதடுக்கும்வகையில் உத்தரவொன்றைப்பிறப்பிக்கு மாறு கோரி போதகர் ஜெரோம் பெர்ணான்டோ உயர் நீதிமன்றில் தாக்கல் செய்துள்ள அடிப்படை உரிமை மீறல் மனு ஜூன் 5 பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

'ப்ரீமியர்லீகல்கென்சல்டன்ட்' சட்ட நிறுவனம் ஊடாகத் தாக்கல் செய்யப்பட்ட குறித்த மனுவின் சார்பில் சட்டத்தரணி நாமல் கருணாரத்ன மற்றும் உதார முகம்திரம்கே ஆகியோர் போதகர் ஜெரோம் பெர்ணான்டோவுக்காக இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்த மனுவின் பிரதிவாதிகளாக பொலிஸ் மா அதிபர், குற்றப்புலனாய்வு பிரிவின் பிரதிப் பொலிஸ் மா அதிபர், கணினிக் குற்ற விசாரணைப் பிரிவின் பனிப்பாளர், சட்ட மா அதிபர் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

## குடாநாட்டிற்கான குடிதண்ணீர் விநியோகம் குறித்து ஆராய சி.வி.கே. தலைமையில் குழு

### மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நியமனம்



யாழ்ப்பாணத்திற்கான குடிதண்ணீர் விநியோகம் தொடர்பில் ஆராய வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தலைமையில் ஐவர் கொண்ட குழு நியமிக்கப்பட்டது. இந்தக் குழுவில் ஜனாதிபதியின் வடக்கு அபிவிருத்திக்கான இணைப்பாளர், மாகாண பிரதம செயலாளர், நீர்பாசனப் பொறியியலாளர், நீர்ப்பாசனக் களப் பணிப்பாளர் ஆகியோரும் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் குழு நீர் விநியோகத்தினை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் விரிவாக ஆராய்ந்து அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. இந்தக் குழுவின் முதலாவது கூட்டம் ஜூன் 2 இடம்பெறும் எனவும் அறிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று இடம்பெற்றபோது இந்தக் குழு நியமிக்கப்பட்டது. முன்னதாக, யாழ்ப்பாணத்தில் பல வருடங்களாகக் குடிதண்ணீர் விநியோகத்துக்காக நிலத்தடியில் குழாய்கள் பொருத்தும் பணிகள் இடம்பெற்று வந்தாலும் அதற்கூடாக விநியோகிப்பதற்கான குடிதண்ணீரைக் கொண்டு வர யாரும் - எந்தவொரு அரசியல்வாதியும் - நடவடிக்கை எடுக்கவில்லை என்று அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் குற்றஞ்சாட்டினார்.

இதையடுத்தே அது பற்றி ஆராய்வதற்கான குழு அவரது தலைமையிலேயே நியமிக்கப்பட்டது. அவைத் தலைவர் அங்கு தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது.

யாழ்ப்பாணத்திற்கு குடிதண்ணீரைக் கொண்டு வருவதில் அரசியல்வாதிகள் அசமந்தமாக இருக்கின்றனர்.

யாழ்ப்பாணத்திற்கு குடிநீர் கொண்டுவதற்கான குழாய்கள் புதைக்கப்பட்டு வருகின்றன. அது நீண்ட காலமாக நடக்கிறது. புதைக்கப்பட்டுள்ள குழாய்கள் ஊடாகத் தற்போது காற்றுக்கூட வருகிறதோ தெரியவில்லை.

அந்தக் குழாய்களுக்கூடாகக் குடிதண்ணீரைக் கொண்டு வருவதில் அரசியல்வாதிகள் அசமந்தமாக இருக்கிறார்கள். இதுதான் உண்மை. அரசியல்வாதிகள் யாரும் இந்தக் குடிதண்ணீர்ப் பிரச்சினை தொடர்பாகக் கதைப்பதாகவும் இல்லை.

வடக்கு மாகாணசபையில் குடாநாட்டுக்குக் குடிதண்ணீரைப் பெறுவது தொடர்பாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அதனைப் பிரதமர் அலுவலகத்திற்கும் அனுப்பி இருந்தோம். அது அப்படியே கிடப்பில் கிடக்கின்றது. அந்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்த ஒருங்கிணைப்புக் குழு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

## பொருளாதாரத்தை மறுசீரமைக்கும் முயற்சிகளுக்கு சீனா முழு ஆதரவு

### அந்நாட்டு அயலுறவுத் துணை அமைச்சர் ஜனாதிபதியிடம் உறுதி





இலங்கையின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்கொள்ளும் முயற்சிகளுக்குச் சீனா முழு ஆதரவை வழங்குமென அந்நாட்டு அயலுறவுத் துணை அமைச்சர் சன் வெய்டாங் வலியுறுத்தினார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேம்படுத்துவதில் சீனா ஆர்வம் காட்டுவதாக சீன துணை அமைச்சர் நேற்று மாலை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்தபோது இதனைத் தெரிவித்தார்.

நாட்டின் நெருக்கடியான காலப்பகுதியில் இலங்கைக்கு சீனா வழங்கிய அசைக்க முடியாத ஆதரவிற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, சீன துணை அமைச்சருக்கு நன்றி தெரிவித்தார்.

இலங்கையுடன் நெருக்கமான உறவுகளை வளர்த்துக்கொள்வதில் சீனாவின் அர்ப்பணிப்பை வலியுறுத்திய சீனத் துணை அமைச்சர், இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதற்கான புதிய வாய்ப்புகளை ஆராய சீனா ஆர்வமாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

சீன வெளிவிவகார துணை அமைச்சர் சன் வெய்டாங்கின் இலங்கைப் பயணம் மற்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடன் இடம்பெற்ற பேச்சு இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தவும் ஒத்துழைப்பை அதிகரிக்கவும் வாய்ப்பாக அமையும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## மிகிந்தலை பொசன் கொண்டாட்டத்துக் நிதி திரட்டி வழங்க ஆதிவாசிகள் முடி

மிகிந்தலை பொசன் பூரணை (போயா) தினத்திற்காக தமது ஒரு நாள் வருமானத்தைத் திரட்டி வழங்குவதாக ஆதிவாசிகளின் தலைவர் விஸ்வ கீர்த்தி வனஸபதி உரிவரிக வன்னிலா பாவனன் ஆத்தோ அறிவித்துள்ளார்.

"எனது கிராமத்தில் உள்ள எனது தலைமுறையைச் சேர்ந்தவர்கள் ஒருநாளில் தாம் செலவிடும் பணத்தைத் திரட்டி மிகிந்தலை பொசன் கொண்டாட்டங்களுக்கு உதவத் தயாராக உள்ளோம்" என்றார் அவர்.

தேசிய பொசன் பூரணை (போயா) வாரம் இன்று முதல் ஆரம்பமாகின்றது என்று புத்தசான அமைச்சு அறிவித்துள்ள பின்னணியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு முதன்முதலில் புத்த பெருமானின் தூய பௌத்த மதம் கொண்டுவரப்பட்ட இடம் மகிந்தலை என்று தெரிவித்த அவர், எனினும் மகிந்தலை பொசனைச் சிறப்பாக நடத்த அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்றார். மிகிந்தலை விகாரை மாகாநாயக்கர் விழாவை நடத்த அனைவரிடமும் நிதிக்காக இரந்து வருகின்றார் என்றும் அவர் தெரிவித்தார்.

மிஹிந்தலா வரலாற்றின் தொடக்கத்தில் இருந்தே பொசன் பெரஹரா, பொசன் பண்டிகையை கொண்டாடி வருகிறது. எனக்குத் தெரிந்த வரை இது இந்த நாட்டின் வரலாறு. ஆனால் இந்த ஆண்டு அங்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இந்நாட்களில் மிகிந்தலையின் தேரர் மிகவும் சிரமத்தில் இருப்பதைக் கேள்விப்படுகிறேன். உண்மையில் அவரைவிட இது விடயத்தில் ஆட்சியாளர்களுக்கே அதிக பொறுப்பு உள்ளது. அ அரசு புறக்கணிக்க முடியா

இத்தகைய பொன்னா பண்டிகைகளின் பொன்னா தருணங்களைக் கண்டறி பாதுகாப்பது அரசாங்கத்தி பொறுப்பு - என்றார் அவ

இந்த வருடம் தேசி பொசன் உற்சவம், மிஹிந்தல மற்றும் அனுராதபுரம் ஆ புனித பூமிகளை மையமா கொண்டு நடைபெறுவதாக அமைச்சு குறிப்பிட்டுள்ள

மேலும், பொசன் வார ற்காக அனுராதபுரம், மி தல ஆகிய நகரங்களை சூழ விசேட போக்குவரத் திட்டமொன்றும் அமு படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனி பொசன் கொண்டாட்டங்களுக்க இலவசமாக மின்சா தரமுடியாதென்று அ விக்கப்பட்டுள்ளதாகவும் சு ப்படுகின்றது.

## சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 9 பேர் கைது



வெற்றிலைக்கேணி, சுண்டிக்குளம், சாலை மற்றும் நாகர் கோவில் கடற்பரப்புகளில் நேற்றிரவு சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்ட 9 பேரை கடற்படையினர் கைது செய்தனர்.

அவர்களிடமிருந்து அனுமதியற்ற மீன்பிடி சாதனங்களையும் சட்டவிரோத மீன்பிடிக்காகப் பயன்படுத்தப்பட்ட 5 டிங்கிப் படகுகளையும் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

சுண்டிக்குளத்திற்கு அருகில் 6 பேரும் வெற்றிலைக்கேணி, சாலைப் பகுதிகளில் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன்,

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் முள்ளியான், புதுமாத்தளன், முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால்,

2

## ஜனாதிபதியின் செயலர் வீட்டுக்கு அத்துமீறிப் புகுந்த இளைஞர் கை

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவின் பாணந்துறை பின்வத்தை இல்லத்துக்குள் நுழைய முயன்ற நபரை பின்வத்தை பொலிஸார் கைது செய்துள்ளதாக அறிவித்துள்ளனர்.

சந்தேகநபர் நேற்று வீட்டின் சுவர் ஏறிக் குதித்துத் தோட்டத்துக்குள் நுழைந்தபோது, அங்கு பாதுகாப்புக்கு நியமிக்கப்பட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் அவரைப் பிடித்தார், ஆனாலும் சந்தேக நபர் பிடியிலிருந்து நழுவித் தப்பிச் சென்றுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் குறித்த பொலிஸ் கான்ஸ் டபிள் பின்வத்தை பொலிஸாருக்கு அறிவித் னையடுத்து பொலி குழுவொன்று அப்பகு யில் தேடுதல் நடத் ஆட்கள் இல்லாத வீடு ஒ றில் பதுங்கியிருந்த சந்தே நபரைக் கைதுசெய்தது.

சந்தேக நபர் காலி பகு யைச்சேர்ந்த 25 வயதுடை வர் எனவும், அவர் போதை பொருளுக்கு அதிகம அடிமையானவர் என பொலிஸார் தெரிவித்தன

இதனையடுத்து அவ போதைப்பொருள் நன் டத்தை பிரிவில் ஒப்பை பதற்கு நீதிமன்றம் ஊட நடவடிக்கைகள் எடுக்கப்ப என்று பொலிஸார் தெ வித்தனர்.

## நாணய நிதியத்தின் அதிகாரி வருகை

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதி முகாமைத்துவ பணிப்பாளர் கென்ஜி ஒக்கமுரா (Kenji Okamura) இரண்டு நாட்கள் உத்தியோகபூர்வ பயணமாக இன்று இலங்கைக்கு வருகிறார்.

அவரது வருகை சம்பந்தமாக நிதி இராஜாங்க அமை விடுத்துள்ள அறிவிப் தெரிவிக்கப்பட்டுள்ளதா

சர்வதேச நாணய யத்தின் பிரதி முகாமைத் பணிப்பாளர் இலங்கை கான தனது இருநாள் ணத்தின்போது

2

## டிஜிட்டல் மயமாகின்றன விவசாயத்துறை தரவுகள்



நாட்டின் விவசாயத்துறை தரவுகளை டிஜிட்டல் மயப்படுத்துவது குறித்த கலந்துரையாடல் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

அரச நிறுவன அதிகாரிகளின் பங்களிப்புடன் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் பில் அன்ட் மெலிண்டா கேட்ஸ் அமைப்பு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

விவசாயத் துறையின் நவீனமயமாக்கல், போசாக்கு, காலநிலை மாற்றத்தை எதிர் கொள்வது மற்றும் நிதிப் பாதுகாப்பு ஆகிய துறைகளை அபிவிருத்தி செய்கையில் தரவு அடிப்படையிலான முடிவுகளை எடுப்பதற்கான அணுகுமுறை தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டதுடன், இது தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை தொடருமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

இதற்காக நிதியுதவி மற்றும் நவீன தொழில்நுட்பத்தை வழங்குவது தொடர்பான அரசின் கொள்கைகள் மற்றும் விதிமுறைகளுக்கு உட்பட்டு இந்த நடவடிக்கைகளில் பங்களிப்பு வழங்க முடியும் என்று ஜனாதிபதியிடம் உறுதியளித்த பில் அன்ட் மெலிண்டா கேட்ஸ் அமைப்பின் அதிகாரிகள், அது பற்றிய விடயங்களை விரிவாக முன்வைத்தனர்.

மேலும், உத்தேச காலநிலை மாற்றம் தொடர்பான பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, காலநிலை மாற் குறம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன, பாதுகாப்பு படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா உள்ளிட்டோரும் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றிருந்தனர்.

# இன, மதவாதப் பிரச்சினைகளுக்கு எப்போது முற்றுப்புள்ளி வைக்கப்படும்?

## ஞானசார தேரரும் கேட்கிறார்



இன, மதவாதப் பிரச்சினைகளுக்கு எப்போது முற்றுப்புள்ளி வைக்கப்படும் என பொதுபல சேனவின் பொதுச்செயலாளர் ஞானசார தேரர் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட போதே பொதுபல சேனவின் பொதுச்செயலாளர் ஞானசார தேரர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

எனக்கு தெரிந்த காலத்தில் இருந்தே நாட்டில் இன, மதவாதப் பிரச்சினைகள் இருக்கின்றன. இந்தப் பிரச்சினைகளுக்கு எப்போது முற்றுப்புள்ளி வைக்கப்படும்.

பௌத்த மதத்தைப் பாதுகாக்க வேண்டுமென அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதோடு, ஏனைய மதத்தவர்களின் உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பௌத்த மதத்தை திட்டமிட்டு அவமதிக்கிறார்கள். இது தொடர்பில் சமூகவலைத்தளங்களில் பரவலாகப் பேசப்படுகிறது. நாடாளுமன்றத்தில் கூட பேசுகிறார்கள். முன்னாள் எம்.பி. ஒருவர் என்னை தூக்கிலிட வேண்டுமென்கிறார்.

மத நல்லிணக்கத்துக்கு பாதிப்பை ஏற்படுத்துபவர்கள்தொடர்பானவிசாரணைகளை மேற்கொள்ள விசேட பொலிஸ் பிரிவை நியமிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார். இதுவொரு நல்ல விடயம் எனவும் ஞானசார தேரர் இதன்போது தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

## வர்த்தக நிலையங்களை மூடி டெங்கு ஒழிப்பு நடவடிக்கை!





கிளிநொச்சி கண்டாவளை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் கீழ் உள்ள விசுவமடு வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் செவ்வாய்க்கிழமை மாலை 4 மணி தொடக்கம் 6 மணி வரையான காலப்பகுதியில் விசுவமடு வர்த்தக சங்கத்திற்கு உட்பட்ட அனைத்து வர்த்தக நிலையங்களையும் மூடி டெங்கு ஒழிப்பு நடவடிக்கை தமது வரத்தகநிலையங்களின் பிரதான வீதியில் இரு

அரங்குகளிலும் சுத்தம் செய்யும் நிகழ்வு நடைபெற்றது. இந் நிகழ்வில் கிராம அலுவலர் மற்றும் சுகாதார பரிசோதனைகள் இணைந்து மேற்கொண்டனர். (05)

## கற்றல் உபகரணப் பொருள்கள் வளத்தாப்பிட்டியில் வழங்கல்





(வி.ரி. சகாதேவராஜா)

சம்மாந்துறை வலயத்தில் உள்ள மிகவும்பின்தங்கிய புதிய வளத்தாப்பிட்டி நாவலர் வித்தியாலயத்தில் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அதிபர் கே கணேஷ் தலைமையில் நடைபெற்றது. சம்மாந்துறை நஜா பவுண்டேன் அமைப்பரால் வழங்கப்பட்ட இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக சம்மாந்துறை வலயக கல்வி பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா கலந்து சிறப்பித்தார்.

கௌரவ அதிதிகளாக உதவி கல்வி பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா, பவுண்டேன் சார்பில் தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் டாக்டர் ஜநூல் ஜாரியா நபீர் கலந்து சிறப்பித்தார்.

கௌரவ அதிதியாக ஆசிரிய ஆலோசகர் இசட் எம். றிஸ்வி கலந்து சிறப்பித்தார். தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற அனைத்து மாணவர்களுக்கும் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (05)

## பிரபல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லகை – சிகை என்ற யுரியூப் அலைவரிசை ஊடாகப் பிரபலமானவர்கள் லக்மால் மற்றும் ரான். நகைச்சுவை நிகழ்ச்சிகளை வழங்கி வரும் இவர்கள் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் வாழும் இலங்கையர்கள் மத்தியில் பிரபலமானவர்கள்.

தனிநிலை நகைச்சுவையாளர் நடாதனது நிகழ்ச்சி ஒன்றில் பௌத்த மதத்துக்கு எதிரான கருத்துக்களைத் தெரிவித்தார் என்று பிக்கு ஒருவர் செய்த முறைப்பாட்டை அடுத்துக் கைது செய்யப்பட்டார். அவரது அந்த நிகழ்ச்சியில் லகை – சிகையான தாங்கள் இருவரும் பங்கெடுத்திருந்ததாகச் சொல்லப்படுவதில் உண்மையில்லை என்றும், தாம் அந்த நிகழ்ச்சிக்கு ஒரு பார்வையாளர்களாகவே சென்றிருந்தனர் என்றும், தற்போது ஆஸ்திரேலியாவில் தங்கியுள்ள இருவரும் தெரிவித்துள்ளனர்.

தொலைபேசி அழைப்புக்கள் மூலம் தமது குடும்பங்களுக்குக் கொலை மிரட்டல் விடுக்கப்படுகின்றன என்றும் அவர்கள் கூறினார்கள். பல தடவைகள் தமக்கு அழைப்பெடுத்த சில குழுவினர் கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும் எனவே அது தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் அது குறித்து முறைப்பாடு வழங்கியுள்ளதாகவும் லக்மாலின் மனைவி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

## சட்டவிரோத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதுக்குடியிருப்பு, மன்னார் மற்றும் மாமுனை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள். 18 முதல் 52 வயதுக்குட்பட்டவர்கள் எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் 9 பேரும், 5 டிங்கி படகுகளும், அனுமதியற்ற மீன்பிடி சாதனங்களும், அவர்களிடம் கைப்பற்றப்பட்ட 110 கடல் வெள்ளரிகளும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணம் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக இலங்கைக் கடற்படை தெரிவித்தது.

## நாணய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நிதி அமைச்சின் அதிகாரிகள் மற்றும் இலங்கை மத்திய வங்கி அதிகாரிகளுடன் கலந்துரையாடவுள்ளார்.

மேலும், கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தித் திட்டம் உள்ளிட்ட பல திட்டங்களையும் கென்ஜி ஒக்கமுரா கண்காணிக்கவுள்ளார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## கடற்கரையில் தென்னை மரங்களை நடும் நிகழ்வு

(பாறுக் ஷிஹாா்)

மரநடுகை செயற்திட்டம் இரண்டாம் கட்டத்தின் கீழ் பயன்தரு தென்னை மரங்களை நட்டு கடலரிப்பை தடுத்து மருதமுனை கடற்கரையின் அழகினைப் பேணுவோம் எனும்தொனிப்பொருளில் ஞாயிற்றுக்கிழமை(28) மாலை மற்றும் திங்கட்கிழமை (29) காலை தொடர்ச்சியாக மருதமுனை கடற்கரை லைட் ஹவுஸ் அருகில் இடம் பெற்றது.

பெரிய நீலாவணை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அப்துல் கபூர் தலைமையில் இந்நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முாரப்பின் கல்முனை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவிற்கான இணைப்பாளர் பி.எம். முகம்மட் ஜஃபரின் ஏற்பாட்டில் மருதமுனை கடற்கரைப் பிரதேசத்தில் இடம்பெற்றது. இதன் போது மருதமுனை பகுதியை நேசிக்கின்ற பல்வேறு சமூக ஆர்வலர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

அம்பாறை மாவட்டத்தில் பசுமைப்புரட்சியை ஏற்படுத்துவதற்காக பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முாரப்பினால் முன்னெடுக்கப்பட்டு வரும் ஒரு மில்லியன் மரங்களை நடும் வேலைத் திட்டத்தின் கீழ் இவ்வாறு மருதமுனை பகுதி கடற்கரை பிரதேசத்தை கடல் அரிப்பிலிருந்து தடுப்பதற்கும் கடற்கரையின் அழகினை பேணுவதற்குமாக தென்னை மரங்கள் நடப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் இதன் முதல் கட்டமாக பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முாரப்பினால் மருதமுனை பகுதி கடற்கரையில் இந்நிகழ்வு முன்னெடுக்கப்பட்டிருந்ததுடன் மரங்களை வளர்க்கும் மனங்களை வளர்ப்போம் எனும் தொனிப்பொருளின் கீழ் எதிர்வரும் ஐந்து வருடத்திற்குள் ஒரு மில்லியன் மரங்களை அம்பாரை மாவட்டத்திலுள்ள சகல பிரதேசங்களிலும் நடுவதற்கான நோக்கோடு இவ்வேலைத்திட்டம் இடம்பெற்று வருகின்றது.

அம்பாரை மாவட்டத்திலுள்ள அட்டாளைச்சேனை, இறக்காமம், திருக்கோவில், நிந்தவுர், சம்மாந்துறை, கல்முனை, மருதமுனை, பானம, அக்கறைப்பற்று, சாய்ந்தமருது, பாலமுனை, ஒலுவில், நாவிதன்வெளி, மாவடிப்பள்ளி, வரிப்பத்தான்சேனை ஆகிய பிரதேசங்களில் இவ்வேலைத்திட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.



வீடுகள், பொது இடங்கள், கடற்கரைப் பிரதேசங்கள், அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், மத ஸ்தாபனங்கள், வயல் காணிகள் உள்ளிட்ட சகல இடங்களிலும் பொதுமக்களின் பங்களிப்புடன் இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுவருகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது.

## கிளிநொச்சியில் அறநெறி பாடசாலை ஆசிரியர்களுக்குப் பயிற்சி நெறிகள்!





இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில், கிளிநொச்சி மாவட்ட செயலகத்தால் இந்து சமய ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறி கிளிநொச்சி மாவட்ட செயலக திறன்விருத்தி நிலையத்தில் சிறப்புற இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பயிற்சி நெறியை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

தொடர்ந்து அறநெறி பாடசாலை ஆசிரியர்களுக்கான விரிவுரை ரீதியான பயிற்சி இடம்பெற்றது. முதலாவதாக அறநெறி பாடசாலை மாணவர்களுக்குரிய பாட நூல்கள் தொடர்பான விளக்கத்தை அறநெறி பிரிவின் உதவிப் பணிப்பாளர் ஹேமலோஜினி நிகழ்த்தினார்.

தொடர்ந்து அறநெறி பாடசாலை ஆசிரியர்களின் முக்கியத்துவம் மற்றும் அறநெறி மாணவர்களுக்கு கல்வி கற்பிக்கும் முறைமைகள் தொடர்பான விளக்கத்தை இந்து கலாசார உத்தியோகத்தர் எஸ்.சுதாகரன் நிகழ்த்தினார்.

மேலும், பிரார்த்தனையின் முக்கியத்துவம் மற்றும் வழிபாடுகள், அதனை கையாளும் முறைகள் தொடர்பாக சட்டத்தரணி தங்கமயில் விரிவுரை நிகழ்த்தினார்.

பயிற்சி நெறியின் முடிவில் அறநெறி பாடசாலை மாணவர்களுக்கான பாடநூல்கள்களும் அறநெறி ஆசிரியர்களுக்கான சீருடைகளும் வழங்கிவைக்கப்பட்டன.

இந் நிகழ்வில் இந்துகலாசார திணைக்களத்தின் பணிப்பாளர் ய.அநிருத்தனன், இந்து சமய கலாசார உத்தியோகத்தர்கள், மாவட்ட கலாசார உத்தியோகத்தர், மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலகங்களின் கலாசார உத்தியோகத்தர்கள், அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (05)

# ஆறுமுகம் தொண்டமான் மறைந்தாலும் காங்கிரஸ் இன்றும் பலமாகவேயுள்ளது

## அதன் செயலாளர் ஜீவன் பெருமிதம்







அமரர் ஆறுமுகன் தொண்டமானின் மறைவோடு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பலவீனமடைந்து விட்டது என சிலர் விமர்சனங்களை முன்வைத்தனர். ஆனால் காங்கிரஸ் இன்னமும் பலமாகவே உள்ளது. இதற்கு எமது தற்போதைய அரசியல் வகிபாகமே சிறந்த சான்று என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்டத்தில், தலவாக்கலை உப பிரதேச செயலகம், நோர்வூட் உப பிரதேச செயலகம் என்பன பிரதேச செயலகங்களாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளன.

இந்நிலையில் புதிய பிரதேச செயலகங்களை அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் நிகழ்வு அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் நடைபெற்றது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஸ்வரன், நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபொட, அம்பகமுவ

மற்றும் நுவரெலியா பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி மன்ற செயலாளர்கள், கிராம, சமுர்த்தி, நலன்புரி ஆகியவற்றின் உத்தியோகத்தர்கள், கட்சி பிரமுகர்கள் மற்றும் அரச அதிகாரிகளும் நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

புதிய பிரதேச செயலகங்களைத் திறந்து வைத்த பின்னர் ஊடகங்களிடம் உரையாற்றிய அமைச்சர் ஜீவன் தொண்டமான் – ஒரு வருடத்துக்கு முன்னர், உப செயலகத்தை திறந்து வைத்தபோது, அதற்கு எதிராக விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. பிரதேச செயலகம் கோரும் நிலையில், உப செயலகம் எதற்கு எனவும் கேள்விகள் எழுப்பப்பட்டன.

அப்போது பிரதேச செலயகம் நிச்சயம் உருவாகும் என நாம் பதிலளித்தோம். அதனை இன்று செய்து முடித்துள்ளோம். வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதும், சொல்வதை செய்வதும்தான் காங்கிரஸின் அரசியல் பலம்.

இராஜங்க அமைச்சு பதவி எமக்கு கிடைத்தபோது, ஆறுமுகன் தொண்டமானின் மறைவோடு காங்கிரஸ் பலவீனமடைந்துவிட்டது என விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. நாம் அமைதி காத்தோம். மறைந்த தலைவர் காட்டிய வழியில் நடந்தோம்.

எமது தவிசாளர் தேசிய சபையில் உள்ளார். தலைவர் கிழக்கு மாகாண ஆளுநராக இருக்கின்றார். நான் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த அமைச்சு பதவியை வகிக்கின்றேன். ஆக இருந்ததைவிடவும் காங்கிரஸ் பலமாகவே உள்ளது.

எமது மக்களின் எதிர்பார்ப்புகளை நிச்சயம் நிறைவேற்றி வருவோம். அடுத்ததாக பல்கலைக்கழக விவகாரத்தையும் செய்து முடிப்போம். – என்றார். (05)

# கல்முனையில் சுற்றாடல் வார வேலைத் திட்டங்கள் ஆரம்பம்





தேசிய சுற்றாடல் வாரத்தை முன்னிட்டு கல்முனை மாநகர சபை ஒழுங்கு செய்திருந்த மர நடுகை நிகழ்வு, செவ்வாய்க்கிழமை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது கல்முனை மாநகர சபையின் பிரதான அலுவலக வளாகத்திலும் சிறுவர் பூங்காக்களிலும் மரங்கள் நடப்பட்டன.

இந்நிகழ்வில் கல்முனை மாநகரசபையின் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம், பொறியியலாளர் ஏ.ஜே.எச்.ஜௌஸி, வேலைகள் அத்தியட்சகர் வி.உதயகுமரன் உட்பட உத்தியோகத்தர்கள் பலரும் பங்கேற்றிருந்தனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைவாக மே மாதம் 30 ஆம் திகதி முதல் ஜூன் மாதம் 05 ஆம் திகதி வரையான காலப்பகுதி தேசிய சுற்றாடல் வாரமாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சுற்றாட வாரத்தில் ஒவ்வொரு நாளும் முறையே மர நடுகை தினம், வளிமாசடைதல் தாக்கங்களைக் குறைக்கும் தினம், சுற்றாடல் சுத்தப்படுத்துகை தினம், உயிர்ப் பல்வகைமை பாதுகாப்பு தினம், நீர் மூலாதாரங்களைப் பாதுகாக்கும் தினம், பேண்தகு காணி முகாமைத்துவ தினம், பிளாஸ்ரிக் கழிவு

முகாமைத்துவ தினம் மற்றும் சர்வதேச சுற்றாடல் தினக் கொண்டாட்டம் என நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

கல்முனையிலும் இந்நிகழ்வுகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு மாகாண முதலமைச்சின் செயலாளரது சுற்று நிருபத்திற்கமைவாக உள்ளூராட்சி ஆணையாளரின் ஆலோசனையின் பேரில் கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி, சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார். (05)

# தோப்பூரில் இலங்கை வங்கி கிளையில் ஏடிஎம் இயந்திரம் நிறுவக் கோரிக்கை!

## வங்கி தலைவருடன் எம்.எஸ்.தௌபீக் எம்.பி சந்திப்பு

(எப்.முபாரக்)



தோப்பூர் இலங்கை வங்கி கிளையில் ஏ.டி.எம். இயந்திரம் நிறுவுவது தொடர்பாக திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் மற்றும் இலங்கை வங்கி தலைவர் ஜனாதிபதி சட் டத்தரணி ரொனால்ட் சி. பெரேராவிற்கும்

இடையிலான சந்திப்பு இலங்கை வங்கி தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்றது.

தோப்பூர் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் அவசர தேவையின் போது ஏ.டி.எம். இயந்திரத்தில் பணம் பெறுவதற்கு சுமார் 15 கிலோ மீற்றருக்கு அப்பாலுள்ள மூதூர் நகருக்கு பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்படுகிறது. இதன் காரணமாக பிரதேச மக்களால் ஏ.டி.எம்.

இயந்திரம் ஒன்றை நிறுவுமாறு கோரிகையொப்பம் இடப்பட்ட கோரிக்கை கடிதம் இலங்கை வங்கிக்கு அண்மையில் அனுப்பி வைக்கப்பட்டது. இதற்கு ஒத்துழைப்பு வழங்கும் முகமாகவே இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின் போது தோப்பூர் இலங்கை வங்கி கிளையில் ஏ.டி.எம். இயந்திரம் பொருத்துவதற்கு விரைவில் நடவடிக்கையை மேற்கொள்வதாக இலங்கை வங்கியின் தலைவர் தெரிவித்துள்ளார். (05)

# சூரிய வெப்பத்தினால் கண்களுக்கு பாதிப்பு

## பொதுமக்களுக்கு எச்சரிக்கை

சிறுவர்கள் உள்ளிட்ட அனைவரினதும் கண்களில் நேரடியாக சூரிய ஒளி படாத வண்ணம் செயற்படுமாறும், தரமான கண்ணாடிகள் மற்றும் தொப்பிகளை அணியுமாறும் தேசிய கண் வைத்தியசாலையின் சிரேஷ்ட வைத்தியர் பிரசாத் கொலம்பகே அறிவுறுத்தியுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நேரடியாக சூரிய ஒளி அதிகமாகப்படும் பட்சத்தில் கண்கள் பாதிக்கப்படும் என்றும் கண் நோய்கள் மற்றும் பிற பிரச்சினைகளின் ஆபத்தை அதிகரிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கண்ணாடிகள் அணிவதன் மூலம் சில கண் பிரச்சினைகள் வராதவாறு தவிர்க்கலாம் என்று குறிப்பிட்ட அவர், நேரடி சூரிய ஒளியால் வாந்தி, தலைசுற்றல் அல்லது மயக்கம் ஏற்படலாம் என்றும் தெரிவித்தார்.

அவ்வாறான நிலை ஏற்பட்டால் வைத்தியர்களிடம் மருத்துவ சிகிச்சை பெறுவது சிறந்தது உனவும் நீரிழப்பைத் தடுக்க தண்ணீர் மற்றும் திரவங்களை அருந்துமாறும் அவர் அறிவுறுத்தினார். (05)

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தண்ணீர் அரசியல்

தமிழர்கள் மத்தியில் ஒரு தத்துவம் இருக்கின்றது. சிறு வயதிலிருந்தே அதனை அவர்கள் நடைமுறைப்படுத்தி வருவதைப் பார்க்கலாம். குறிப்பாகப் பாடசாலைகளில். குழப்படிகாரர்களைப் பிடித்து வகுப்பு முதல்வர்களாக (மொனிட்டர்) நியமித்துவிட்டால் வகுப்பு அமைதியாகிவிடும் என்பதே அந்தத் தத்துவம். அதாவது ஏதாவது ஒரு தேவையைக் குறித்து குரல் எழுப்புபவரையே அந்த விடயத்திற்குத் தலைவராக்கிவிட்டு, அந்தத் திட்டம் நிறைவேறாமல் பார்த்துக்கொள்வார்கள். இதன் மூலம் குரல் எழுப்பியவரையே குற்றவாளியாக்கி வாயை அடைக்கப்பண்ணிவிடுவதுதான் இந்தத் தேர்ந்த உத்தி.

யாழ்ப்பாணத்திற்குக் குடிதண்ணீர் வழங்குவது தொடர்பில் அரசியல்வாதிகள் – குறிப்பாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் – எவரும் குரல் கொடுப்பதே இல்லை என்று மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் குரல்கொடுத்த வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானத்தையே அது தொடர்பாக ஆராய்வதற்கான குழுவிற்குத் தலைவராக நியமித்திருப்பதைத் பார்க்கும்போது இதுவும் அதுபோன்ற ஒரு உத்தியோ என்றுதான் சந்தேகப்படவேண்டியிருக்கின்றது.

அனைத்து மக்களுக்கும் தூய குடிதண்ணீர் அடிப்படை உரிமை என்கிறது ஐக்கிய நாடுகள் பேரவை. ஆனால், இலங்கையைவிட்டு பிரித்தானியர்கள் வெளியேறி 75 ஆண்டுகள் கடந்துவிட்டபோதும் யாழ்ப்பாணத்திற்கோ வடக்கில் உள்ள எந்தவொரு மாவட்டத்திற்குமோ தூய குடிதண்ணீர் கிடைப்பதில்லை. வடக்கில் உள்ள நிலத்தடி நீர் மாசு நிறைந்தது என்பது ஏற்கனவே பல ஆய்வுகள் மூலம் நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. ஆனாலும் அதனையே தொடர்ந்தும் பருகவேண்டிய இக்கட்டு நிலை ஏற்பட்டிருக்கின்றது.

யாழ்ப்பாணத்திற்கு கிளிநொச்சியின் இரணைமடுக் குளத்திலிருந்து குடிதண்ணீரைக் கொண்டுவரும் திட்டம் ஒன்று பற்றி முன்னர் பேசப்பட்டது. அந்தத் திட்டத்தையொட்டியே குடாநாட்டுக்கான குடிதண்ணீர் விநியோகத் திட்டமும் உலக வங்கியின் நிதியில் தொடங்கப்பட்டது. இந்தத் திட்டத்தின்படி இரணைமடுக் குளத்தின் அணைக்கட்டு சீராக்கப்பபட்ட இரண்டு அடிகள் உயர்த்தப்பட்டு அதில் தேக்கப்படும் மேலதிக நீர் யாழ்ப்பாணத்திற்குக் குடிதண்ணீராக வழங்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால் கிளிநொச்சி விவசாயிகள் அதற்குத் தெரிவித்த கடும் எதிர்ப்புக் காரணமாகவும் வடக்கு மாகாண சபையும் அதற்கு ஆதரவாக இருநந்த காரணத்தாலும் அந்தத் திட்டம் கைவிடப்பட்டு, குடாநாட்டுக்கு குடிதண்ணீர் விநியோகிப்பதற்கென கடல்நீரை நன்னீராக்கும் திட்டம் ஒன்று வடமாராட்சி கிழக்கில் தொடங்கப்பட்டது.

அந்தத் திட்டப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இன்னும் அது முழுமையடையவில்லை. அண்மையில் வடக்குக்கு வந்த நீரியல்வளத்துறை அமைச்சர் ஜீவன் தொண்டமான், அதன் பணிகளை நேரில் சென்று பார்வையிட்டுத் திரும்பியிருந்தார். இதைத் தவிர ஆறுமுகம் திட்டம், பாலியாற்றுத் திட்டம் எனச் சில திட்டங்கள் பரிசீலனையில் உள்ளன. இரணைமடுக் குளத்தின் கழிவு நீரைத் தேக்கி அதனை குடாநாட்டுக்கான குடிதண்ணீராக மாற்றுவது தொடர்பான திட்டமும் ஒன்றுண்டு. ஆனால் இவையெல்லாம் புதிய திட்டங்கள் இவற்றைச் செயற்படுத்த இப்போதைக்கு அரசிடம் பணம் இல்லை. இன்னும் 4, 5 ஆண்டுகளானாலும் இத்தகைய புதிய திட்டங்களை அரசு தொடங்கும் என்று எதிர்பார்ப்பதற்கும் இல்லை.

அப்படியிருக்கும்போது எங்கிருந்து யாழ்ப்பாணத்திற்குக் குடிதண்ணீரைக் கொண்டுவரப்போகிறார்கள். உடனடிச் சாத்தியப்படான ஏதாவது திட்டத்தை இந்தக் குழுவினர் முன்வைக்கிறார்களா என்று பார்ப்போம். இல்லையேல் எதிர்த்துக் குரல் எழுப்பியவரை அடக்குவதற்கான உத்தியாகத்தான் இந்தத் தலைவர் பதவி முடிகின்றதா என்பதையும் பார்ப்போம்.

யாழ்ப்பாண மக்களுக்கான குடிதண்ணீர் என்பது மிக அவசரமான அவசியமான தேவை. எனவே தட்டிக்கழிக்காமல் அனைத்துத்தரப்பினரும் இணைந்து அதனைச் செயற்படுத்துவது அவசியம். அசமந்தமாக இருக்காமல் செயற்படுவதும் அவசியம். இந்தக் குழு மூலமாவது அதற்கொரு விடிவு கிட்டும் என்று எதிர்பார்ப்போம்.

# கிரிக்கெட் சுற்றுப்போட்டி









(எப்.முபாரக்)

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய்வலயக்கல்விஅலுவலகத்துக்குட்பட்ட தி/அல் தாரீக் தேசிய பாடசாலையின் 55 வருட நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட பாடசாலை பழைய மாணவர்களுக்கிடையிலான இரண்டாவது மாபெரும்

'அல்தாரிக்கேயன்ஸ் மெகா ப்ளாஸ்ட் கிரிக்கெட் சுற்றுப் போட்டிகள்' அல் தாரிக் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் கல்லூரியின் முதல்வர் ஐ.எம்.தௌபீக் மற்றும் பழைய மாணவர்கள் ஒன்றியத்தின் செயலாளர் ஏ.ஜி.எம்.பஸால் ஆகியோரின் தலைமையில் நடைபெற்றன.

இக்கல்லூரியில் கல்வி கற்ற கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய 24 அணிகள் பங்கு பற்றின. இதன் ஆரம்ப நிகழ்வு ஊர்வலத்தோடு ஆரம்பமானது. நிகழ்வுக்கு பாடசாலையில் கற்பித்த பல முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பழைய மாணவர்களும் கலந்து கொண்டார்கள். இந்த அழகிய தருணம் ஒவ்வொரு அல்தாரிக்கேயனின் பாடசாலையில் கற்றுக்கொண்டிருந்த பொற்காலத்தை ஞாபகமூட்டுவதாக அமைந்திருந்தது.

மூன்று நாள்கள் நடைபெற்ற சுற்றுப் போட்டிகள் 8 ஓவர்களை கொண்ட அணிக்கு11 பேரைக் கொண்ட விலகல் அடிப்படையில் அமைந்திருந்ததோடு, 24 அணிகளும் ஒன்றையொன்று எதிர்த்தாடின. இறுதிப் போட்டிக்கு 2008 ஆம் ஆண்டு அணியும், 2015 ஆம் ஆண்டு அணியும் ஒன்றையொன்று மோதி 2008 ஆம் ஆண்டு அணி அல்தாரிக்கேயன்ஸ் மெகா ப்ளாஸ்ட் வெற்றிக் கிண்ணத்தினையும் பெறுமதியான பணப்பரிசிலையும் தனதாக்கி 2023 ஆம் ஆண்டுக்கான சாம்பியன் முத்திரையைப் பதித்தது. இந்நிகழ்வின் இறுதிப் போட்டிக்கு பிரதம அதிதியாக கிண்ணியா வலயக் கல்விப் உதவிப் பணிப்பாளர் ஏ.எல். சிராஜ்,அல் தாரிக் தேசிய பாடசாலையின் அதிபர் ஐ.எம். தௌபீக்,யாரா குளோபல் நிறுவனத்தின் திருகோணமலை மாவட்ட இணைப்பாளரும்,

ஈஸ்டன் டயர் ஹவுஸ் முகாமைத்துவ பணிப்பாளருமான பி.எம்.எம்.அஸ்ரப், கல்வி அதிகாரிகள் பழைய மாணவர்கள் எனப்பலரும் கலந்து சிறப்பித்தார்கள். (05)

## பாடசாலை மாணவர்களுக்கான சுற்றுச்சூழல் பாசறை

சிறகுகள் அமையத்தின் சுற்றுச் சூழல் பிரிவின் ஏற்பாட்டில் தரம் 6, 7, 8 மாணவர்களுக்கான சுற்றுச்சூழல் பாசறை எதிர்வரும் 3,4 ஜூன் (சனி, ஞாயிறு) தினங்களில் காலை 9.00 மணிமுதல் 12.00 மணிவரை கொக்குவில் இராமகிருஸ்ணா வித்தியாலயத்தில் இடம் பெறும்.

செயற்பாடுகளை உள்ளடக்கியதான பயிற்சி பாசறையில் ஊடாக சூழலியல் விஞ்ஞானம் சார்ந்த விடயங்களை மாணவர்களுக்கு கொண்டு சேர்ப்பது இலக்காகவுள்ளது. குறித்த பயிற்சி பாசறையில் துறைசார் வல்லுனர்கள் வளவாளர்களாகக் கலந்துகொள்வதுடன் மாணவர்களுக்கான பங்குபற்றுதல் சான்றிதழும் வழங்கிவைக்கப்படவுள்ளது.

பாசறையில் கலந்துகொள்ள பதிவினை www.sirakukal.live எனும் இணைப்பினூடாக பதிவுகளை மேற்கொள்வதுடன் மேலதிக விபரம் பெற – +94 77 678 5023 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும்.

## ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த குளிர்ச்சிப் பெருவிழா!

(வி.ரி. சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற காரைதீவு ஸ்ரீகண்ணகை அம்மன் ஆலயத்தின் வருடாந்த திருக்குளிர்ச்சி சடங்கு கடந்த திங்கட்கிழமை மாலை கடல் நீர் எடுத்து, கல்யாண கால் முறித்து நடுதலுடன் ஆரம்பமானது.

முன்னதாக ஆலயத்தில் தர்மகத்தாக்கள், கப்புகனார்கள் நிருவாகிகள் சேர்ந்து விசேட பூஜை வழிபாடு இடம்பெற்று, பாரம்பரிய மரபு முறைப்படி பறைமேளம் அடித்து கடற்கரைக்கு சென்று அங்கு விசேட பூஜை இடம் பெற்று கடல்தீர்த்தம் எடுக்கப்பட்டது.

அங்கிருந்து நேராக வீதி முழுவதும் நடைபாவாடை விரிக்கப்பட்டு, கல்யாண கால் (பூவரசு மரக்கிளை) முறித்து எடுக்கப்பட்டு, பக்தர்களால் ஆலயத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

ஆலயத்தில் அதற்கான சடங்குகளை செய்து உரிய வேளையிலே குரவை ஒலிக்கு மத்தியில் கல்யாணக்கால் சிறப்பாக நடப்பட்டது.

ஆயிரக்கணக்கான மக்கள் கூறைச் சாறிகளை அம்மனின் கல்யாண காலுக்கு சாத்தி

வழிபட்டார்கள். மேலும் பலகாரங்கள், வெற்றிலை, பாக்கு, நைவேத்தியம் வைத்து வழிபட்டார்கள். ஆலய தர்மகத்தாக்களான பரமலிங்கம் இராஜமோகன் , இரா.குணசிங்கம், சா.கங்காதரன் தலைமையில் முதல்நாள் சடங்கு சிறப்பாக நடைபெற்றது.

திங்கட்கிழமை ஆரம்பமாகி இந்தச் சடங்கு தொடர்ந்து 08 தினங்கள் நடைபெற்று ஜூன் மாதம் 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை 4.30 மணிக்கு திருக்குளிர்த் பாடலுடன் நிறைவடையும். 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை சடங்குப்பூஜையும் ஊர்சுற்றுக்காவியம் பாடலும் இடம்பெறும். தொடர்ந்து புதன்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை பகல் ஒரு மணிக்கு பூசையும் மாலை 7 மணிக்கு சடங்குப்பூசையும் ஊர்சுற்றுக்காவியம் பாடலும் இடம்பெறும்.

05 ஆம் திகதி திங்கட்கிழமை பொங்கலுக்கான நெற்குத்தும் வைபவம் நடைபெறும். மறுநாள் செவ்வாய் அதிகாலை குளிர்த்தி பாடப்பெறும்.

எட்டாம்சடங்கு 12 ஆம் திகதி மாலை 7 மணிக்கு இடம்பெறும். (05)

## டெங்கு ஒழிப்பு சிரமதான நிகழ்வு

( வி.ரி. சகாதேவராஜா)

டெங்கு ஒழிப்பு சிரமதானம் காரைதீவு ஸ்ரீகண்ணகை அம்மன் ஆலய வளாகத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை நடைபெற்றது.

காரைதீவு முதலாம் ஆறாம் பிரிவுகளில் வசிக்கும் மக்கள் சேர்ந்து அப்பகுதி கிராம சபை உத்தியோகத்தர்களான செல்லத்துரை கஜேந்திரன் திருமதி சிறிகாந்தன் தலைமையில் சிரமதானத்தை மேற்கொண்டார்கள். காரைதீவு பொலிஸாரும் இணைந்து கொண்டனர்.

வருடாந்த திருக்குளிர்த்தி சடங்கு ஆரம்பமாகி இருப்பதால் பக்தர்களின நலன் கருதி ஆலய வளாகத்தில் இந்தச் சிரமதானம் இடம் பெற்றது. (05)

